[illegible]

[illegible]

June 1934

JL
R673[illegible]2·11,N128
M34·7·6.
187096

1434

Registered No. M. 2330.

" SIDDHANTHAM "
Vol. 7—No. 6.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

1434

சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

மலர் எ | பவ ஆண்டு ஆனித் திங்கள் 1934 ஷ ஜூன்மீ | இதழ் ௬

உள்ளுறை பக்கம்

முப்பர் தொட்டியுலா ... கருக
யாகத்தில் உயிர்ப்பலி ... ககஉ
திருவாசகம் உரையுடன் ... சுOக-சுகசு
சித்தாந்த சாத்திரம் உரையுடன் ... அக[illegible]

19 JUN 1934
MADRAS

ஆசிரியர் :—ம. பாலசுப்பிரமணிய முதலியார், B. A., B. L.
உதவி ஆசிரியர் :—அ. கந்தசாமிப் பிள்ளை.

சைவ சித்தாந்த மகாசமாஜம்,
150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை.

ஆண்டுச் சந்தா ரூ. 2-0-0. 1934 தனிப் பிரதி அணா 4.

உ
சிவமயம்

முக்கிய அறிக்கை

கோடை விடுமுறைக்காக சமாஜக்காரியாலயம் 10-6-1934 முதல் 25-7-34 வரை மூடப்படும். இந்த ஒன்றரை மாதத்தில் புத்தகம் பெற விரும்புவோர் திருவாளர் அ. சோமசுந்தரம் செட்டியாரவர்கள் எம். ஏ., உரிமையாளர் ருக்மிணிகுக்கர் கம்பெனி, 5, தெற்கு மாதாகோவில் தெரு, இராயபுரம், சென்னை என்ற விலாசத்துக்கு எழுதவேண்டும். வேறு விதமான கடிதப்போக்குவரவுகள் 25-7-34 க்குப் பிறகுதான் கவனிக்கப்படும்.

இங்ஙனம் :
ம. பாலசுப்பிரமணியன்,
காரியதரிசி.

பெரியபுராண வெளியீடு

இது மிகச்சிறப்பாகக் குன்றத்தூரில் சேக்கிழார் சுவாமிகள் திருநக்ஷத்திரத்தன்று (19-5-1934) நடைபெற்றது திரு. அ. சோமசுந்தரம் செட்டியாரவர்கள் தலைமையில் திருவாளர்கள் - கி. குப்புச்சாமி முதலியார், ச. சச்சிதாநந்தம் பிள்ளை, திரு. வி. கலியாணசுந்தர முதலியார், தி. கி. நாராயணசாமி நாயடு ஆகிய அன்பர்கள் பெரியபுராணத்தைப்பற்றி விரிவாகப் பேசினார்கள். நூற்றுக்கணக்கான அன்பர்கள் சென்னையிலிருந்தும் இம்மாகாணத்தின் பல பகுதிகளிலிருந்தும் வந்து கேட்டின்புற்றார்கள்.

சம்பந்தர் திருநாள்

இது சமாஜத்தின் சார்பில் திருமயிலைக் கபாலீச்சரத்தில் கொண்டாடப்பட்டது. உயர்திரு சுந்தரஓதுவார்மூர்த்திகள் சம்பந்தர் தேவாரப்பாடல்கள் பலவற்றையும், சம்பந்தரைப்பற்றிய குறிப்புக்கள் வரும் ஏனைய திருமுறைப் பாடல்கள், பிள்ளைத்தமிழ், திருப்புகழ் சிலவற்றையும் அமிழ்தினுமினிய நல்லிசையில் அமைத்துப் பாடினார்கள். இறுதியில் திரு. வே. தியாகராஜ முதலியாரவர்களால் சமாஜத்தின் சார்பில் ஓதுவார்மூர்த்திகட்கும் ஆலய அதிகாரிகட்கும் ஏனையோருக்கும் வந்தனமளிக்கப்பட்டது. திருமயிலையில் திருக்கபாலீச்சரத்தில் ஆலய அதிகாரிகளால் ஒரு தேவாரபாடசாலை நடத்தப்படுதல் வேண்டுமென ஆங்குக்குழுமிய அன்பர்கள் ஏகமனதாக விண்ணப்பித்துக் கொண்டார்கள். இவ்விண்ணப்பத்தை ஏற்று ஆலய அதிகாரிகள் விரைவில் ஒரு தேவாரபாடசாலையைத் தாபகம் செய்வார்களென்று எதிர்பார்க்கிறோம்.

Registered No. M. 2330.

19 JUN 1934
MADRAS

சித்தாந்தம்

மலர் எ	பவ ஆண்டு ஆனித் திங்கள் 1934ஆ ஜூன்மீ	இதழ் சு

முப்பந்தொட்டியுலா

காப்பு

சொல்லுமுப்பந் தொட்டிவரு சோமநா தீசரன்மே
னல்ல வுலாவை நவிலுதற்கு—வெல்லுந்
திருத்தன் மருகன் செயங்கொள்செல் வப்பிள்ளை
யொருத்தன் முகனமக்கே யுண்டு.

நூல்

தலவரலாறு

1 சீர்பூத்த தண்பிறையுந் தீம்புனன்மந் தாகினியுந்
தார்பூத்த செஞ்சடையிற் றுங்கினோ—னேர்பூத்துத்
தோன்றுமதி வெம்பருதி சொற்றிகழுஞ் செய்யவன்னி
மூன்றுகோ வான முகத்தினான்—கான்றிகழுங்
கந்தரஞ்சொல் வட்டக் கமடமருப் பென்பிதழி
வந்திலங்கு கின்ற வரைமார்பன்—சந்ததமு
நீறணிந்த மெய்ய னெரித்தநர சிங்கவுரி
கூறு மிதமான கோவணத்த—னாறுமலர்ப்
5 பாதனுல கெல்லாம் பரவ வரிதான
நாத னெவரிடத்து நண்ணுவோ—னாதிநாள்

வந்தசிந்து தேசத்தின் மாமண்ட லாதிபனுஞ் [கள்
சுந்தரஞ்சேர் மங்கைமின்னுஞ் சொற்சுதனுந்—தந்திரங்
மன்னுமதி யூகியுமாய் வாழ்ந்திருக்கு நாளதனிற்
பன்னுஞ் சிவதலங்கள் பார்க்கவென—வுன்னுகையி
லாகாச வாணிசொல்வா ளானதொண்டை நாடதனில்
வாகா யலையாறு மாமுனிவர்—யோகநிலை
செய்யுஞ் சிவதலமுஞ் சித்தங் களிக்கவுண்
டையமறப் போமென்ன வாங்கவனு—மெய்யினுளம்
10 வெய்யில்மெழு காயுருகி மேவுமனை செய்தளங்கள்
செய்யு மகிழ்ச்சியுடன் செல்லுமப்போ—மையகன்ற
கொய்யுளைப்பாய் மாவிரண்டு கொண்டதிவே கங்கொளவே
வெய்யதளஞ் சேய்மனைவி விட்டேக—வையமில்லாத்
தென்பூமி நந்திமலை தீனரட்சி பாலாறு
மன்னு மிருபாலு மாமுனிவ—ருன்னுலிங்கப்
பூசை செயுமிடங்கள் பொற்றொண்டை நன்னாடு
காசி தனிலதிக காஞ்சிபுர—மீசுரியார்
மெய்த்தவமாய்ச் செய்யுமிட மேல்பாலாம் பூங்கோடு
வைத்ததெண்ட காரணிய மாதீர்த்தஞ்—சித்தமது
15 ஒன்றுஞ் சிவானந்தர் யோகஞ் செயுமிடமும் [முனி
வென்றிபெற வந்துகண்ட வேளையினிற்—குன்றின்
பாதம் பணியுமப்போ பார்த்திபனே யிங்ஙன்வந்த
தேதுமனத் துள்ள தியம்புமென—வாதரவா
யிந்த வனமு மினிதிருந்த மாதவத்தோர்
பந்தமறச் சொன்ன பதவியல்புஞ்—சிந்தைமுற்ற
முக்கணன்றாள் பூசை முறையு முரையுமென
வக்கண் சிவானந்த வம்முனிவன்—மிக்கவே
யேத்மறக் கேட்பா யிதுதெண்ட காரணிய
மாதவமி ராமர்செய வந்தவிட—மோது

20 முனிவ ரிரவிமதி மூதறிவாந் தேவ
ரினியசிவ பூசைசெய வெண்ணிக்—கனிவுடனே
வந்தவிடம் வேதமா வாக்யதத்து வ[ம்]மசியா
மிந்தப் பொருள்வசிட்ட ரிராமருக்—கந்தமுற
முப்பதமு மேபிரித்து முன்னு முபதேசஞ்
செப்பியது மிந்தவிடஞ் சிந்தைவைப்பா—யிப்படியெந்
நாவா லுனக்கருள்வோ நாமுரைத்த சொற்படியே
யேவற் பணிவிடைசெய் யென்னவே—யாவலுடன்
செப்பு மெனக்காம தேனுவைவிட் டேயிதனைத்
தப்பறவே மேய்த்திங்ஙன் சாருமென—வொப்பியே
25 செல்லுமப்போ தேகாம தேனுவின்பின் னேபோந்து
வல்லநதி நீர்குடித்த வண்மைகண்டு—நில்லாமற்
போகையிலே வெம்புலியும் போய்ப்பிடிக்கக் கூப்பிட்ட
வோகையிலாச் சத்தத்தா லுற்றவில்லுந்—தாகமற
மந்திரவா ளுங்கணையும் வன்மமறக் கொண்டுசெல்ல
வந்தப் புலியுரைத்த தாச்சரிய—நிந்தைமன்னு
காட்டிலிரை யில்லாமற் கண்கலங்கி வெம்பசியாற்
கூட்டுமிரை கொள்ளாமற் கொல்லவந்தாய்—நாட்டு
மனுநீதி தேர்ந்தமன்னு வார்த்தைசொல்லக் கேணீ
நணியபசி தீரவருள் நாட்டா—யெனவுரைக்க
30 மாதவத்தோ னுவை வருத்தாமற் றன்னையிப்போ
கோதிக்கோ ளென்னவவன் கூறியிடு—நீதியினு
லிந்தநெறி கொண்டமன்னு வென்ற னுடல்குளிர்ந்தேன்
சந்ததமு மீசனே தான்காப்பன்—சுந்தரமாய்
மன்னுநீ யும்பசுவு மாமுனிவன் றன்னிடத்திற்
கொன்னேநில் லாமற் குறுகுவா—யென்னவே
போகாம லாங்கவனும் போர்வாளா லோவிடுத்தாய்
வாகாய்ப் படைவிடுத்தேன் வன்புலியே—பாகாக
நின்பசியைத் தீர்த்திடென நேயமுட னப்புலியு [த
மன்பா யமர்ந்[illegible] மாங்கது தான்—பொன்போதிந்

தாமார் கடுக்கைச் சடைச்சோம நாதரெனச்
சோரா விழியின் முனந் தோன்றவே—பேரா
யிரமுடைய வள்ளலே யீசமகா தேவ
வரகர [1]வென் றேசொல் லமையம்—விரைவுடனே
கோமுனிவன் முன்னைக் கூறுதிரங் கண்டேங்கி
மாமுனிவன் சீறுமுன்ன மாதேவன்—சோமனையே
செஞ்சடையில் வைத்த தெரிசனங்கண் டேயுருகி
நெஞ்ச மகிழ்ந்துமன்ன நீகேளாய்—விஞ்சுமுன்னாள்
சோமனார் பூசைகொண்ட சோமநா தக்கடவு
டாமிருந்த வெல்லையென்று சார்ந்ததிருக்—காமியார்
மேவு தவஞ்செய்யும் வேளையினி னீயும்வந்து
பூவிலைகொண் டேயவரைப் பூசித்தே—யாவலுடன்
மன்னுகின்ற வேளையண்ணல் மாப்புலிபோ லேயுனது
முன்னம்வரக் கண்டேங்கி மூண்டெழுந்து—பன்னு
மழைப்புயல் கொண்டோங்கு மாமேனி யாங்கே
யழைக்கத் தவமிருந்த வைய—னுழைக்கரனைச்
சிந்தைதனில் வைத்திருந்தார் சீறும் புலியையண்ணல்
வந்ததெனக் கட்டியொன்று மாறதனைப்—பந்தமறக்
கண்டேங்கி வந்து கதறும் பசுப்போல
வண்டர்பிரா னைத்துதித்த [வப்]போது—விண்ட
தவக்குறையா லவ்வுட றுன்விட்டோர் வேந்தன்
பவப்பிணிதீர்க் கும்மகவாய்ப் பாரி—னுவப்புடனே
வந்தாய் தவக்குறையை மாற்றவிப்போ விவ்விடத்தைச்
சிந்தைமகிழ்ந் தேகண்டாய் தேறுமன்ன—வந்தவிட
மாமுப்ப தப்புரமா மன்னுமுப்பந் தொட்டியாஞ்
சோமநா தப்புரமாஞ் சொல்லிலின்ன—நாமமுமெய்ஞ்
ஞானயோ கர்சித்தி நன்னகர மென்றுமுன்னோர்
மானமுடன் சொல்லவந்த மாநகர—மானவதி

(பிரதி)—[1]வென் றுசெ

லெந்நாளு மன்பா யிருந்துசிவ புண்ணியத்தைப்
பன்னாளுஞ் செய்திடென்று பாலித்தா—ரந்நாளில்
முன்னம் பிரிந்த முயங்குமங்கை மின்னாளு
மன்னுமண்ட லாபுருட மாமகவு—முன்னரிய
மந்திரியாம் யூகி வரனுடனே நால்வகையாந்
தந்திரியோ டேயத் தளங்களெலாம்—வந்திடவே
மைந்தனுக்குப் பட்ட மகிழுடனே தான்றரித்துச்
சிந்துதே சத்திற் செலவிடுத்து—நந்தலிலா
நீட்டுபொருள் வந்ததனு னேழுநிலைக் கோபுரமும்
வாட்டமிலா வாயிரக்கான் மண்டபமு—நீட்டுங்
கொடிமதிளுஞ் சுற்றிருக்குங் கோவிலுமுண் டாக்கி
நெடியதெரு வீதி நெருங்கக்—குடிகடமில்
வேதியர்தம் வீதிகளும் வேந்தர்செறி வீதிகளு
நீதி நெறிவசியர் நீள்தெருவு[ம்]—போதரிய
வேளாளர் வீதிகளு மேவும் பலகுடியு
நாளுமிக வோங்கவே நாட்டிவைத்துக்—கோளறவே
மேடத் திருநாள் விளங்கச்செய் தானந்தார்
சூடுஞ் சிவானந்தர் சொற்படியே—நாடுமர
னங்க ணிருந்தே வனேகவுப சாரமுடன் [முஞ்
மங்களமாய்ப் பூசைகொண்ட மாதேவன்—கொங்குவிம்

மூர்த்தியின் பெருமை

செங்கமல மானபதன் றில்லைமூ வாயிரவர்
தங்களிலொன் றுய்வந்த சாம்பசிவ—னிங்கண்
திருநீல கண்டரில்லாள் சேர விளமை
தருநீல கண்டன் றரைமேன்—மருவுங்
கயற்கணியை யீங்குக் கருணைசுரந் தன்பா
யியற்பகையாற் கேபொழியு மின்கார்—நயத்துடனே

யுன்னரிய மாமழையி னுற்று முளைவாரி
யன்னமிட வேயங் கருள்கொடுத்தோன்—பன்னவரு
மெய்ப்பொருணாட் டன்றனது மெய்யான வன்புகண்டு
கைப்பொருள்போன் முத்திநெறி காட்டினோன்—றப்பு
கண்டா லடியவரைக் கண்டித்து மீறும்விறன் [நெறி
முண்டருக்கன் பேகொடுக்கு மூர்த்தியார்—பண்டைநாள்
கோதில்பொருள் சேய்மனைவி கோவணநேர் தூக்குமமர்
நீதியார்க் கன்புசெய்பு நீதியா—னோதவரு
மெத்திசையோர் போற்று மினிய வெறிபத்தர்
பத்திகண்டு முத்திநிலம் பாலித்தோன்—சித்திரமாய்த்
தோற்றான்பின் னீறணிந்து தோன்றவே னாதியார்
மாற்றானை யீசனென வந்துநின்றோன்—சீற்றமறக்
கற்றோர் புகலவொரு கண்சாத்துங் கண்ணப்பன்
மற்றோர்கண் ணும்பிடுங்கா வாறுசெய்தோ—னுற்ற
கலைச்சிக்கி யுள்வளையக் கண்ட கலையன்
கொலைக்கஞ்சி யேநிமிர்ந்த கோமான்—சிலைப்புருவ
வஞ்சியள கந்தவற்கு மானக்கஞ் சாறனார்
பஞ்ச வடிக்கீயநலம் பாலித்தோ—னெஞ்சிட்
படுபொருணற் றாயனார் பாற்கமரிற் சிந்த
வடுவொலியுங் காட்டவங்கண் வந்தோன்—படிதனிலே
யாயனா ரஞ்சக் கரத்தை யகமகிழ்ந்தே
வேயி னிசைக்க வெளிப்பட்டோன்—றாயருக்கு
நந்தலிலா மாமூர்த்தி நாயனார் தன்முழங்கைச்
சந்தனக்காப் புக்கிழைக்கத் தான்வந்தோன்—கந்தமுள
பூமலரஞ் சக்கரமுப் போதுமுரைத் தேயெடுத்த
மாமுருகன் மாலையினால் வாழ்வளித்தோ—னாமுத்திப்
பாரி லுருத்ர பசுபதியார் சீருத்ரம்
நீரிற் செபிக்கவந்த நீண்முடியோன்—றேருந்

திருநாளைப் போவான் செழுங்கன லுண்மூழ்கி
வருநாட் கதியளித்த வள்ள—லொருநாடான்
சொல்லுந் திருக்குறிப்புத் தொண்டர் பணிக்குறையாற்
கல்லிற் றலைமோதக் கைபிடித்தோன்—வல்லபிதா
பாதந் தடிந்த பலன்மாலை தீர்த்தப்ர
சாதந்தண் டேசுரற்குத் தந்தபிரான்—றீதகல
வுப்பருக்கு மாமணிக ளீண்டாந் திரைக்கடலி
லப்பருக்குக் கன்மிதக்க வன்புசெய்தோ—னொப்பிலா
மெய்கண்ட சைவநெறி மேவுங் குலச்சிறைக்குக்
கைகண்ட முத்திநெறி காட்டினோன்—செய்பிராண
வாயுவையே தானிறுத்தி வந்தமிழ லைக்குறும்பர்
நேயங்கண் டின்ப நெறியளித்தோன்—றூய
கனிதருமன் பாலேபொற் கற்பு மிகுந்த
புனிதவதிக் கன்புசெயும் புத்தே—ளினிதுடனே
செப்பியவப் பூதியார் சேயைவிடந் தீண்டியுநல் [திரு
லப்பருக்கன் னங்கொடுக்க வங்கண்வந்தோன்—செப்பு
நீலநக்கர் தேவியுமி நீர்தடவி யச்சிலந்தி
யாலுமன்பு செய்ய வருள்கொடுத்தோன்—சீலமிலாத்
தப்புச் சமணர்சொல்லாற் சாயா நமிநந்தி
யப்புவினாற் றீபமிட வாங்குவந்தோன்—செப்பியபெண்
ணாகவென்பைத் தென்மயிலை யம்பதியிற் சம்பந்தர்
பாகனைய பாடலுக்காப் பாலிப்போன்—யோகர்நிலை
கண்டசுந்த ரற்குக் கலிக்காமர் நெல்கொடெனக்
குண்டையூர் நின்று கொடுத்தபிரான்—பண்டைநா
ளாவைபிரட் சிக்க வயற்காயஞ் சேர்ந்தோர்சொன்
மேவுதிரு மந்திரத்தின் மேனின்றோ—னாவலர்சொற்
றண்டி யடிக டடாகம்வெட்ட வேசமணர் [நாள்
கண்டடியக் கண்கொடுத்த காட்சியான்—பண்டொரு
சூதாடி மூர்க்கனார் தோற்றாரைக் குத்தியவப்
போதாடி வந்த புனிதனார்—வேதாவோ

டண்டர்புகழ் சோமாசி யாரடியார் தெய்வமென்று
கண்டபொழு தேவந்த கண்ணுதலான்—பண்டைநூல்
சொல்லியநீர் பூவன்னஞ் சோராமற் சாக்கிய[ர்]முக்
கல்லெறிய முத்திநிலை காட்டினோன்—வல்லமையே
வாடாச் சிறப்புலியார் வந்தேற்ப வர்க்கிட்டுக்
கோடா மகமுடிக்கக் கொண்டபிரான்—பாடுஞ்
சிறுத்தொண்டன் சேயான சீராளன் றன்னை
யறுத்திடவே யன்புசெயு மண்ணல்—குறைப்படா
வாதியுலாப் பொன்வண்ணத் தந்தாதி செய்தமன்னன்
காதற் படியே கருணைசெய்தோ—னேதியசீர்
காழிக் கணநாதன் கண்ணுதலோன் கோவிலினி[ழமுடி
தூழியஞ்செய் வார்க்குகந்த வுண்மைகண்டோன்—வா
நாட்டோமென நூலோர் நற்கூத் துவந்துதாள்
சூட்டியர சாளவைத்த சோதியான்—பாட்டுரைத்துப்
பொய்யடிமை யில்லாப் புலவ ரறிவினுக்காய்
மெய்யடிய ரென்றுயர்ந்த வீடளித்தோன்—வையமதி
னை சடைமுடிக்கா யக்கினியின் மூழ்கவுமே[ஞானமிக
மானபுகழ்ச் சோழன்முன்னம் வந்து நின்றோன்—
முற்றுநர சிங்க முனையர்திரு வாதிரைநாட்
பெற்றதவத் தாலருளைப் பெய்கின்றோ—னத்தின்
மறிகடன்முன் மீனீசன் வார்கழற்கென்றேயங்
கெறியுமதி பத்தருக்கன் பீந்தோன்—சிறியவிடைப்
பொட்டுநுத லார்கரங்கள் போகக் கலிக்கம்பர்
வெட்டும்போ தாண்டு வெளிப்பட்டோ—னிட்ட
விளக்கினி[ன்]ற தீமாய மெய்க்கலிய னார்தங்
களத்தை யரியவந்த கர்த்தன்—வெளுத்துவர
நேசவடி யார்களையே நிந்தித்தார் நாக்கரிந்து
மாசகலுஞ் சத்தியர்முன் வந்த வள்ளல்—பேசியசீ

ரையடிகள் காடவர்கோ னய்ந்துவெண்பா நாடோறுஞ்
செய்யுமுறை கேட்டுமகிழ் சீராளன்—மெய்யே
தரிக்குங் கணம்புலனார் தன்றலையைப் புல்லோ
டெரிக்க வெளிப்பட்ட வீசன்—பெருக்கமுடன்
காரிநா யன்சொற் கவிபாடுந் தொண்டுடனே
சேரும் பணிவிடையுஞ் செய்யவந்தோன்—நீரநெடு
மாறனார் நீறும் வளர்சிவ பத்தி[யுமெய்]
யேறவுஞ்செய் போதுவந்த வேழைபங்க—னீறணிந்து
ஞானமுடன் வாயிலார் நாயனார் நேயமா
மானதபூ சைக்குநிதம் வந்தவள்ள—றூனுணர்ந்து
சீரியர்க்குத் தானிதமுந் தேடும் பொருள்கொடுத்த
பாரின் முனையடுவார் பால்வந்தோ—னோர்பூவான்
மூக்கிழந்தாள் கையும்விழ மோதுங் கழற்சிங்கற்
கூக்கமுற வீடு முதவினோன்—கோக்கணின்முன்
மூட்டையடி யார்க்கன்ன முட்டாமற் கொண்டதென்று
காட்டு மிடங்கழியார் காணவைத்தோ—னீட்டுபுகழ்
தேக்கு செருத்துணையார் தேவிசெய்த குற்றத்தான்
மூக்கரிந்த போதுவந்த மூர்த்தியார்—நோக்கொன்றும்
பூசை யிருநாளுஞ் செய்த புகழ்த்துணையார்
மாசகலச் சொப்பனத்தில் வந்தவள்ள—றேசுபெறுங்
கோட்புலியி சர்க்குக் கொடுத்தநெற்கொண் டோருயிரை
வாட்கிரையாக் குங்கணத்தில் வந்தவள்ளல்—தாட்பரனை
சாக்கிரத்துஞ் சொப்பனத்துந் தானினைந்து நீங்காம [ச்
னேக்குபத்த ராய்ப்பணிவார் நோக்கவந்தோன்—சீர்க்கமலப்
பாதம் பணிந்து பரமனையே பாடுவா
ரோதுமிசை கண்டவர்முன் னோடிவந்தோன்—தீதகன்ற
சித்தத்தை யேசிவன்பால் வைத்தோர் தெளிவுகண்டு
நித்தியமா முத்தி நிலைகொடுத்தோன்—வைத்ததிரு
வாரூரி லேபிறந்தா ராடு நிலையறிந்து
தாரூர் சடையுடனே தான்வந்தோன்—பார்மீது

சீரேய்ந்த முப்பொழுதுந் தீண்டுவார் பூசைக்கா
யேரேய்ந்த பாத மினிதளித்தோன்—பேராய்
முழுநீறு பூசு முனிவர்விதிக் கற்பம்
வழுவாநீ றிட்டிடவும் வந்தோ—னழுவாம
லன்பிளைப் பாலுமடி சார்ந்த [வ]டியார்க்குத்
தென்புதர வந்த செழுஞ்சோதி—பொன்பெறவே
பூசல்நா யன்னுளத்திற் பூங்கோயிற் கட்டிலிங்க
நேசப்ர திட்டைசெய நீங்காதோன்—றேசுபெற
வந்தமங்கை யர்க்கரசி மாமனத்தின் பத்தியினாற்
சிந்தைமகிழ் முத்திநிலை செய்கின்றோ—னிந்தணிந்தோ
னேசனென வேவந்த நேசநா யன்றனக்கு
[1]வாசமலர்ப் பாத மகிழ்ந்தளித்தோ—னீசனையே
காணுந் திருநீல கண்டபெரும் பாணருக்கே
வேணிமதி காட்டவந்த மெய்ப்பரமன்—பூணு
நசையில்சடை யார்க்கருளே நாட்டினோ னென்று
மிசைஞானி யார்க்கருளே யீந்தோன்—பசைதீர்
மனுநீதி சோழனுடை வண்மைகண்டே யென்றும்
பனுநீதி செய்யும் பரமன்—கனிவுதர
வெண்ணிலாப் பேர்க ளிதய மகிழ்ச்சிபெறக்
கண்ணருளே நல்கியின்பக் காட்சிதந்தோ—னண்ணரிய
போக்கும் வரவுமிலான் பொய்யருக்குப் பொய்யானோன்
வாக்குமனத் துக்குமெட்டா மாதேவ—னோக்கரிய
மெய்யருக்கு மெய்யன் விதிமா லறியாத
வைய னனலகிரி யாயினோன்—செய்யும்
விருப்பாம் புலிக்காலன் வேண்டுமதலைக்குத்
திருபபாற் கடலளித்த செல்வன்—மருப்பிலகு
மாலைவாய்ச் சூகரம்போ யன்றழுத குட்டிக்குப்
பாலைவாய்ப் பெய்த பரமேசன்—ஞாலமதிற்

[1]இதன்பின் கோச்செங்கட் சோழரைச் சிறப்பித்தற்குரிய கண்ணி யொன்று இருத்தல்வேண்டும்.

காண வரும்புலவன் கண்டோட வேவிறகைப்
பாணனுக் காகச்சுமந்த பையரவ—னீணிலத்தி
னக்கீரன் றோல்விபெற நாற்கவிவல் லோனெனவே
சொற்கீர மானமொழி சொன்னமுதல்—பொற்பா
நரியைப் பரியாக்கி நற்பாண்டி யன்முன்
தெரிய மறைப்பரிமேற் சென்றோன்—பெருகுவையை
யாற்றை யடைக்க வரியகொட்டுங் கூடையுமாய்ப்
போற்றுமவ்வைக் காளான பொற்சடிலன்—றேற்றமிலாத்
தக்கன் றலையைத் தடிந்துநறு நெய்சமித்தோ
டொக்கவிட்டு வேள்வி யொடுக்கினோ—னிக்குமதன்
றேவி யிரதி திகைத்தழுத நீர்மாற
வாவியுடல் காண வவட்களித்தோன்—பாவலர்சொல்
தத்துவந்தொண் ணூற்றாறுந் தாமுணர்ந்து தன்னையறி
யுத்தமர்க டானான வுண்மையான்—சுற்றுபசுக்
கத்துகன்றைத் தானகலாக் காட்சிபோற் கற்றவர்பாற்
சற்றும் பிசகாத தண்ணளியான்—முற்றுநெஞ்சு
மெஞ்சி யரிபிரம ரேனையரும் வந்தளவி
லஞ்சலென்று நஞ்சையுண்ட வாதிபரன்—விஞ்சுபுகழ்ச்
சீலனைமார்க் கண்டனையே சீறு மதிகோபக்
காலனைக்கா லாலுதைத்த கங்காளன்—காலகஞ்ச
மாயிரத்தி லொன்றுகுறை யாய்கண் மலர்தரித்த
மாயனுக்கோ ராழி வழங்கினோன்—தீயகுண
முப்புரத்தின் மூவருய்ய முற்றுவித்து மற்றனைவோர்
மைப்புரத்தை யேயெரித்த வாணகையான்—கொப்பிரு
காதவர்கற் பிற்றுரு காவனத்தின் மாமுனிவ [க்குங்
ரோதாத் தவமழித்த வொப்பிலான்—பாதியுடல்
கோதி லுமைக்குக் கொடுத்துப்பொன் னம்பலத்தில்
வாதினுக்கா யாடி மகிழ்கின்றோ—னோதவரு
தில்லையினின் மேவுஞ் சிவப்பிரகா ச[ன்]னிசைத்துச்
சொல்லுந் தமிழ்மாலை சூடினோன்—மல்லறரு

தசாங்கம்

கானமுற்றும் மேவுமலர்க் காரளிகை மாநெருங்கி
வானமுட்டு நந்தி வரையினான்—பானுமுட்டும்
பாரவகிற் குங்குமமும் பல்லாம்பல் வெண்மருப்பி
னாரமுநீர் மேவியபா லாற்றினான்—சீர்தெளிய
வல்லோர் மிகுசான்றோர் மாதருமஞ் செய்யவரு [ந்து
நல்லோருஞ் சேர்தொண்டை நாட்டினான்—சொல்லோர்
தேடுகின்ற பேர்கற்றோர் சின்மயத்தி னென்றாக
நாடுமுப்பந் தொட்டி நகரினான்—பாடுமளி
தேனைக் குடித்துத் தினந்தோறுங் காம்போதி [ராய்
தானிசைக்குங் கொன்றைமலர்த் தாரினான்—பாணிக
மின்னுகின்ற கொய்யுளையும் வெண்பல்லு மாகநல்லோர்
பன்னவரு வேதப் பரியினா—னுன்னுமலஞ்
சாடித் தவமோங்கத் தம்மையுணர்ந் தோர்பவமாங்
காடழிக்கு ஞானக் களிற்றினான்—தேடமரர்
தேற வசுரர்பயந் தீருமா லென்றென்றுங்
கூறு மிடபக் கொடியினா—னீறணிந்தோர்
சிற்றறிவு போகச் சிவம்பொருளென் றோரறிவு
முற்ற வதிரு முரசினான்—கற்றறிந்தார்
சொன்ன மொழிதவறாத் தூயர்வாழ் வாரென்றே
சின்ன முழங்கவுயர் செங்கோலான்—பொன்மணிகள்

உலாச் சிறப்பு

மொய்த்ததிருக் கோபுரமு முன்னிசைந்த பந்தர்களுஞ்
சித்ரமணி மண்டபமுஞ் சேர்மதிளு—நித்தியமா
மாலயமும் வந்தோர்க ளாடுதீர்த் தக்குளமுங்
கூலமணி வீதிகளிற் கோதிலா—வேலைமிகு
வேதியர்கண் மன்னவர்கண் மேலாங் குலவசியர்
சாதியுயர் வேளாளர் தாமுதலா—யோதவரு

பல்குடியு நாளும் பலதா னியதனமு
மல்கி மிகவும் வளரவே—நல்கவரு
சுந்தரியோர் பாகர் சுருதி மிகவுரைத்து
நந்தலிலா வாழ்சோம நாதனார்—விந்தைபெறப்
பண்ணுங் கடல்போலப் பல்லியங்க டாமுழங்க
வுன்னரிய வீதியெங்கு மோங்கவே—முன்னி
யுலாவுதிரு நாளி லொருநா ளெழிலா
நிலாவியசீ ராகமத்தி னேரே—குலாவுகின்ற
தேவர்பிரா னைப்பூசை செய்யமணி மண்டபத்தி
னாவலுட னேவருசிங் காதனத்தி—னாவதனா
லேத்தி யதன்க ணெழுந்தருளப் பண்ணியன்பாய்த்
தேற்றிய பூசையது செய்தபின்பு—போற்றிய
பட்டாடை சாத்திப் பதித்தமணிப் பொன்மகுட
மிட்டுச் சிரசி லிசைந்திருக்கக்—கட்டுமணிப்
பட்டமிட்ட நெற்றியினிற் பாங்கான கத்தூரிப்
பொட்டுமிட்டுக் காந்தி பொலிவுதர—விட்டபச்சைத்
தோடு குழையிற் றுலங்கமணிக் கண்டத்தி
லாடு மணிச்சரங்க ளாங்கசைய—நாடுரத்நத்
தோள்வளைய னின்று துலங்க மணிக்கரத்தில்
வாள்வளையுங் கங்கணங்கள் வந்திலங்க—நீள்வரியன்
வேங்கையின்றோன் மேலே விளங்கும் வயிரமணி
நீங்கரிய பட்டையிடை நின்றசையத்—தாங்குமணிக்
காலிற் சிலம்பு கனகவெயி லெறிக்கச்
சாலை மகிழுஞ் சமயத்தின்—மாலைமின்னார்
கொண்டை குலுங்கவிரு கொங்கைநின் றேகுலுங்கக்
கண்டசர முத்துவடங் கண்டசையக்—கொண்டகொப்
காதசையச் செம்பதுமக் கைவளைய னின்றசைய [புக்
வோதுபதத் திற்சிலம்பு வுற்றசைய—மாதர்செறி

மெய்ப்படியே யாடுகின்ற வேலைதனி லேமகிழ்ந்
திப்படியோர் காணாத மேறியே—செப்புகின்ற
வீதிதனி லேவரவே மெய்க்கண் மலர்தரித்த
மூதரியேற் றுக்கொடிதான் முன்போத—வூர்திமறை
சொன்னவெள்ளி வேதண்டத் தூய தவளநிற
முன்னோன் மகிழ்விடையு முன்போதப்—பன்னுமறை
பூம னனந்தனிலும் பூங்கம லக்கண்ணன்
காமன் பிதாநற் கருடனிலுந்—தாமமணி
யிந்திரன்வெள் ளானையிலு மேழுவித நாப்படைத்த
சந்த வனலோன் றகர்தனிலும்—பந்தமறுங்
காலன் கயவாய்க் கருமைக் கடாவினிலும்
வால நிருதிநர வாகனத்துங்—கோல
வருணன் மகரத்து மான்கலையின் மீதும்
பொருடனதன் புட்பகத்தும் பூமேற்—கருணைதரு
மீசான தேவ னிடபத்து மாறிரண்டு
தேசு பெறும்பருதித் தேர்மேலுங்—காசுநிக
ழிந்து விமானத்து மீச னுருப்படைத்து
வந்தோ ரிடபத்து மாமுனிவர்—சந்தமிகு
மோரெழுவர் தேர்மேலு மொத்தசித்த சாரணர்கள்
சீரெழுபுட் பங்கொண்டு சேவிப்ப—வேரெழுந்து
கூர்கொண் டிடுமொற்றைக் கொம்பனே ரம்பனுய
ரேர்கொண்ட வாகுவினி லேறிவரப்—பார்கொண்டே
கட்டுமுலை யாரிருவர் காந்தன் மரகதச்சூட்
டிட்டமயின் மீதே யெழுந்தருளப்—பட்டுளதார்
கூந்தலுமம் பார்விழியுங் கொண்ட சவுந்தரியே
ரேந்துமிள வன்னத்தி லேறிவரச்—சாந்தணிந்த
வெண்டா மரைமயிலு மேலா மரம்பையருந்
தண்டா மரைத்திருவுந் தார்ச்சசியும்—வண்டாருந்
தாரூர் வசியுமிசை தான்கொண்ட மேனகையு
வாரூர் முலைநாக மங்கையருஞ்—சீரூர்

மலைகடலி னீரூர்ந்த மங்கையரு மன்று
நிலையா யிருபா னெருங்கி—யலைவிலா
வேடிக்கை யாய்வரவே வெள்ளைக் கொடிகள்பல
ஆடிவர நெட்டி யழகாக—நீடியகால்
சேர்த்து நிரைத்துவந்த திங்க ளனேகமென்னக்
கோத்தமுத்தின் வெள்ளைக் குடைநெருங்க—வேற்றி
வட்டமிட்டுச் செங்கதிரை மாற்றச் சிவந்தினிய [ருந்தி
பட்டாற் சுருட்டி பலநெருங்க—விட்டபொன்னின்
வெண்சா மரையிரட்ட விஞ்சையருக் கொப்பாகப்
பண்பாடு வோரிசைகள் பாடிவரக்—கண்காணும்
வேத வொலிமுழங்க வீராணம் டக்கைகையான்
மோதுமத்த ளாதி முழங்கிவரப்—பாதிமதி
வேணிமுடி யான்வந்தான் மெய்ப்பரம யோகியரி
லாணிக்கை யாயிருக்கு மண்ணல்வந்தான்—பூணுமணி
நாகமணிந் தோன்வந்தா னூடு முபநிடத
வாகமுமாய் நின்ற வரன்வந்தான்—மாகமதி
லுண்டாம் பகிரதியங் குற்றசடை யோன்வந்தான்
கண்டான் மூன்றான கடவுள்வந்தான்—பண்டமரர்
போற்று மலையரையன் பொற்பா மருகன்வந்தான்
கூற்றனைக்கா லாலுதைத்த கூற்றன்வந்தான்—மாற்ற
வையன்சோ மேச னருள்தரவந் தானென்று [மில்லா
செய்ய திருச்சின்னஞ் சேவிப்ப—வையமதில்

குழாங்கள்

மின்னனையா ரெண்ணிலார் வேடிக்கை தான்பார்க்கப்
பொன்னார் பணிகள் புனைந்துகொண்டு—சொன்னநிறச்
சேலை யணிந்துசெழுஞ் சிந்தூரப் பொட்டணிந்து
மாலை குழற்கணிந்து மைதன்னை—நீல
விழிக்கெழுதிச் சிற்றிடைக்கு வேண்டுமரைப் பட்டை
செழித்த வரைஞாணைச் செலுத்திப்—பழிப்பில்லா

205 வெண்டையம்பொன் னின்சதங்கை வேண்டியகா லுக்க
கொண்ட மகிழ்ச்சியுடன் கூடியே—தண்டாள [ணிந்து
மெத்தை யதின்மேலு மேவுநிலா முற்றத்துஞ்
சுற்றுமணி மண்டபத்துஞ் சூழுமதிற்—பத்தியிலும்
அங்கங் கிருந்து மளகேசன் றோழனெனுஞ்
சங்கரனார் பொற்புகளைத் தான்பார்த்துப்—பொங்கிவரு
மாலாழி மூழ்கும் வகைகண்டு மக்கணமே
காலாழி பூண்டுவருங் கன்னியர்மேல்—மேலாம்வேள்
தென்றற்றே ரேறிச் சிறைக்கிள்ளை பாய்பரியாய்
வென்றிடுங்கண் ணார்கள் மிருதளமா—யொன்றிருளே
210 மும்மதமா தங்கமாய் முன்குயிலெக் காளமா
யம்ம வீணையிசைக்க வாரளிகள்—
* * * *
* * * —பன்னுவெள்ளை
மன்னியபூச் சங்கெடுத்து வாயில்வைத் தூதவுமே
பன்னுமலர்ச் சாதி பலவிளக்காச்—சொன்னகடல்
தூரியமாய்க் கேதகையே சுற்று முடைவாளாய்
பாரிற் கரும்பே பருஞ்சிலையாய்—நாரியதில்
வண்டா யொருநாலு வாளிதனை யேவிடவே
கண்டார் மனங்கலங்கிக் கண்டசரம்—வெண்டாளம்
215 பூணார் புழுகணியார் பூமாலை கொண்டையின்மேற்
காணா வகைசெய்தார் கையதனால்—நாணாமல்
ஆடுங் கழங்குடனே யம்மானை தான்மறந்தார்
நீடுபல் லங்குழிகள் நீத்துவிட்டார்—பாடுகின்ற
கீதமறந் தார்கரத்திற் கிள்ளையும்விட் டேயிருந்து
மாதரள வில்லாரில் மற்றொருத்தி—பேதை [நல்லாள்.]

பேதை

பொன்போலு மேனியாள் பூங்கோதை கூடும்வகை
மன்கூன் கவரி மயிரசைத்து—மின்சேரும்.

மூவகையாய்ப் பின்னி முளைத்த சடைபோல
வாவலுடன் பின்னே யசையவிட்டு—மேவியபொற்
சுட்டி பிறைபருதி சே[ா]திபெற முன்னிலங்கக்
கட்டி நுதலினிலக் காப்பணிந்து—இட்டமுடன்
கண்டசர மாமணிகள் கைவந்தி கைவளையல்
கொண்ட வுடைதாரங் கொலுசு தண்டை—பண்டை
காண விடுமிடங்கள் காந்தி பெறவணிந்து [யோர்
மாணிலங்கு கின்ற மலரடிக்குப்—பூணு நிறச்
செம்பஞ்சை யூட்டித் திருந்துகின்ற பேதையரி
லம்பிரண்டுங் கண்ணுன வாயிழையாள்—கொம்பிருந்து
கூவாமல் வந்தகுயில் கூவிப் பறவாமற்
பாவாணர் சொல்லும் பசுங்கிள்ளை—பூவார்ந்த
மன்ற றிகழு மலரளைந்து பாலுளநீ
ரென்றும் பிரியா விளவன்னம்—நன்றிதிகழ்
திங்கட் கொழுந்து தெவிட்டாத தெள்ளமுத
பிங்கொற்று வந்த விளந்தென்றல்—பங்கமறச்
செத்துப் பிறக்கின்ற தெய்வங்கள் போலவே
யிற்றுப் பிறக்கு மெயிற்றிஞள்—நத்துபுன
லுட்டா மரையரும்பு வுள்ளாகி யுள்ளிருந்து
மட்டா யிருந்தமுலை மார்பினள்—கட்டழகி
சிற்றி லிழைத்துச் சிறுவியர்க டம்முடனே
யொத்தமொழி பேசி யுவந்திருந்து—நற்றெருவிற்
காந்தண் மலர்நெருப்பாய்க் கல்லே கரியாகச்
சேர்ந்த மணற்சோறு செய்கையிலே—ஆய்ந்தோர்சொல்
தேவாதி தேவன் றிருத்தேர்மேற் செல்லுகையால்
மூவா முதல்வனென்று மூதறிந்தோர்—நாவா
லுரைத்த மொழிதெரியா வொண்ணுதலா ணங்கண்
ணருத்தவிருந் துக்கழைமி னென்பாள்—பருத்தகழை

முத்தெறிந்தா ளுமு முயன்றுமவர் பூச்செண்டை
யொத்தெறியா ரோவுண்மை யோவென்றாள்—மொய்த்தமணி
மார்பெல்லா[ந் த]ங்கு மணக்கோலப் பிள்ளையுடன்
சேரப் பொருத்துமெனச் செப்புவாள்—மார்பில
* * * * *
கட்டி விளையாடுங் கண்மணியே—மட்டிலா
வேத மறியா விமல னுலகனைத்து
மோதவு மெட்டா வொருமுதல்வன்—பேதமிலான்
மெல்லியலே நீபுலம்ப வேண்டா மெனத்தேற்றி
யல்லறீர்[க்] கின்ற வமையத்திற்—சொல்லிடது
பாகம் பிரியாமற் பார்ப்பதியை வைத்தபிரா
னாக மணிசோம நாதனார்—யோக
விரத மவணகன்றே யேக மதனன்
குரகதப்பைங் கிள்ளையிவன் கொண்ட—விரவுதென்றற்
றேரைநிறுத் தாமற் சிலையைக் குழையாமற்
போரின் மலர்க்கணையைப் பூட்டாமற்—பாரில்
நிதம்பவர வல்குலா ளேங்காமற் போந்தா
னிதம்பேதை யங்கிருந்தா னோராய்ப்—பெதும்பை

பெதும்பை

திருத்தா மரையிடத்திற் சேர்ந்த மடந்தை
விருப்பா மயிலென்னு மின்னை—யுருப்படவே
வெற்றிபெற்று மாரன் விளங்கும் பவனிக்குச்
சிற்றிடைத்தே ரான செழுந்தென்றல்—கற்றவர்சொல்
பேறு [புகழ்]மை பெருமை தரும்பெண்மை
மீறி யரும்பவந்த மெய்யினள்—நாறியபூ
மாலையையங் காமுகனு மாமனம்வண் டாய்விழவே
கோலமுடன் சேர்த்த குழலினள்—ஞாலமதில்

வஞ்சனைகள் எங்கொலைகள் வந்தசிறு மையறியா
எஞ்சலில் லாத விருகண்ணாள்—மிஞ்சச்
சகமும்வச மாக்கவருந் தாட்டா மரையின்
முகையின்முனை போலு முலையாள்—சுகமார்
வெகுசரச லீலவித மெல்லியர்கள் சொல்லால்
வகைவகையாய்க் கற்ற மனத்தாள்—நகைமுகமாய்
மெல்லியர்க டம்முடனே மேவுமணிப் பந்தரின்கீழ்
சொல்லும் பலவிதங்க டோன்றவே—குல்லைபுனை
மாறன் றுதிக்குமடி வண்மை தனைப்பாடிச்
சீறுப் புலியதளின் சீர்பாடி—நீறார்ந்த
மேனி தனைப்பாடி வீறுங் கரத்தணிந்த
மானையும் பாடி மழுப்பாடி—யாறார்ந்த
செஞ்சடிலம் பாடிச் செழுமதியம் பூசிக்க
வஞ்சதரன் வந்த வருள்பாடிக்—கொஞ்சுஞ்
சவுந்தரவா லாம்பிகையின் றருள்பாடிச் செங்கை
சிவந்திடவே கந்தபொடிச் சிந்த—வுவந்து
கழங்காடி யேயிருக்குங் காலையினிற் சின்ன
முழங்க வியங்கள் முழங்க—பழங்க
ளிலங்கு கதலி யிடநெருங்குந் தேர்மே
னலங்கொள் புகழ்ச்சோம நாதர்—பலந்தரவே
வந்தா ரவர்தம் மதிமுகத்தின் மாணழகுஞ்
சுந்தரஞ்சே ரும்புயங்கள் தோன்றழகுங்—கந்தமலர்த்
தாரிதழி மின்னித் தயங்குகின்ற மார்பழகும்
வீரகண் டாமணியு மேலழகும்—நேருடனே
கண்டாள் களித்தாள்செங் காவிவிழி யாலழகை
யுண்டாள்பா ராதவர்போ லுத்தமனார்—பண்டையைப்போ
லங்கண்விட் டப்பா லகன்று ரரியமதன்
செங்கையம்பு கொண்டப்பாற் சேர்ந்தனன்பின்—மங்கைதான்

மங்கை

காமனு லெல்லாங் கரைகாண வேகற்றுத்
தாமரையின் மன்னுந் தனியன்ன—மாமமதிற்
சேலைத் துரத்தித் தி[ட]வேலை யும்பழித்து
நீலத்தை யொத்த நெடுங்கண்ணாள்—மேலொத்த
பாலுந் தெளிதேனும் பாகுங் கொடுத்துமிகு
மாலுந் தரும்பவள வாயினாள்—சாலவே
கொட்டுமெழில் வாரி குமிழிமுத்து மாலையினை
யிட்டுவந்த தென்னு மிளமுலையாள்—மட்டுமலர்க்
கொண்டை யதினாலுங் கொங்கை யிணையாலுந்
தெண்ட னிடவணங்குஞ் சிற்றிடையாள்—பண்டைமதன்
தேரோசொல் லாழியோ செம்பொன்மணித் தட்டோவென்
றாராய்ந்து காமுகர்சொல் லல்குலாள்—போராடும்
காமன்விழாக் காவணத்திற் கட்டுங் கதலியென
வாமமிரண் டான வனப்பினாள்—பூமலர்க்கை
பந்தேந்தி மாதருடன் பாடி யிடைதுவளக்
கொந்துமலர்க் கொண்டைக் குழல்சரியச்—சிந்தூரப்
பொட்டுத் துலங்கப் பொலன்சிறந்த வள்ளையினி
லிட்ட பணிக ளிசைந்தாடக்—கட்டுமணிப்
பொற்சரங்க ளாடப் பொருந்தும் வளர்நீலக்
[1]கற்சரங்க ளாடக் கவினாட—நற்சுரும்பு
சுற்றுந் தொடையாடச் சொன்னமுலைக் கச்சாட
நித்தில மாலை நிறைந்தாடச்—சித்ரமணித்
தோள்வளைய லாடத் துலங்குசரி கற்கடகம்
நீள்விழிகண் டாடவே நின்றாடத்—தாள்விளங்குந்
தண்டை யசையச் சதங்கை கலகலெனக்
கண்டு விளையாடுங் காலையினி—லண்டர்பிரா

(பிரதி)—[1]கற்கரங்க.

னத்தி யுரிபோர்த்தோ னம்பலத்தி லாடினோன்
கற்ற விருடியர்க்குந் தண்கருணை—வைத்தவர்கள்
மாதவங்கள் முற்ற வருகின்ற சித்துருவா
னாதி பரமான வத்துவித—னோதுமுப்பந்
தோட்டி தனிலமர்ந்த சுத்த சிவானந்தன்
கட்டு மணிக்காலன் கங்காளன்—துட்டச்
சமணர் கழுவேறச் சைவம் விளங்க
விமலமணி நீறும் விளங்க—கமலமுகச்
சுந்தரியோர் பாகம்வைத்த சோதியான் சீர்த்தியென்றும்
நந்தவிலா நற்சோம நாதனார்—விந்தைபெறுந்
தேரேறி வந்தவர்தம் செய்ய விதழியந்தார்
வாரேறு பூண்முலைமேல் மன்னவே—காரேற்ற
பூங்குழலை வாங்கிவந்தாற் போர்மதன னுக்கஞ்சே
னீங்கென் றிவள்புகலு மெல்லையினி—லாங்கவன்றே
ரப்பா லகன்றிடவு மாலைமத னன்கணைக்கே
இப்பாலென் செய்வேனென் றேங்கினாள்--செப்புமுலைப்
பெண்பிறந்தா ரெல்லோரும் பேசினதுங் கேளீரோ
கண்பிறந்த காதற் கடப்பரோ—வெண்பிறந்த
சொல்லினாற் றேற்றித் தொடர்ந்துவந்த தோழியர்கள்
மெல்ல வணைத்தறை மேவுகையின்—மல்லாற்
றொடர்ந்த மதனனுஞ் சோராக் குயிலிற்
கடந்தவிசை யாலுமனங் காணாள்—மடந்தையரின்

மடந்தை

மற்றொருத்தி நாக மடந்தை யரின்மேலாள்
உற்ற வரம்பையரி லொப்பிலாள்—நத்துவருங்
காரோ வறலோ கருநீலச் சைவலமோ [றை
தாரோதி யென்னவருந் தாழ்குழலாள்—சீர்கொள்பி
கண்டோர் மனமுருகக் கத்தூரிப் பொட்டணிந்த
துண்டாகி லொப்பான வொண்ணுதலாள்—மண்டமரி

லம்பைத் துரத்திமிக வாசையுள்ளோர் தங்களையே
வம்பாக வாட்டு மலர்க்கண்ணாள்—நம்பினோர்
சோகமுற வெட்பூவுஞ் சோர்குமிழு மேகடுப்ப
மோகங் கொடுக்குமுயர் மூக்கினாள்—நாகமணி
யூட்டியிடு மோலையினை யோர்மனமு மொன்றாகக்
காட்டியுஞ்ச லாட்டும்வள்ளைக் காதினாள்—நாட்டுசங்க
மன்னசெழுங் கந்தரத்தா ளான பசுங்கழையி
னென்ன விளங்கு மிருதோளா—ளுன்னுமுல்லை
நீங்க வரிசே[நர்] நகையா[ள்]வெண் ணித்திலஞ்சேர்
கோங்கை யனையவிரு கொங்கையாள்—பாங்கரிய
நீலமணிப் பொன்னாரம் நீங்காம லேகிடந்த
வாவிலையே யென்னு மணிவயிற்றாள்—மேலாய்ப்
பருவமுயர்ந் தேறும் படியோர் பிரமன்
வரையின் வயிற்றின் வரையா—ளுரைவல்லோர்
பாடியபொற் றேரோன் பகராழி யோவென்று
ஆடவர்நித் தம்புகழு மல்குலாள்—நாடுமும்பற் [தா
றாண்டையையொப் பான தொடையாள் மலர்ப்பதத்
ளொண்டொடியார் சூழ வுடனேறித்-தண்டமிழ்சொன்
மேல்வீட்டின் முன்றில் வெளியணுகிப் பாலாற்றின்
கால்வேட்ட வோடைக் கரைபார்த்து—மால்வேட்ட
[1]குன்றுகள் பார்த்துக் குறுகா வனம்பார்த்து
வென்றி யயற்காடு மேற்பார்த்து—நன்றிதருந்
தண்டா மரைக்குளங்க டானும்பார்த் தல்விநனை
விண்டதடம் பார்த்து வெளிபார்த்து—வண்டிறந்த
காநந் தனவனங்கள் கண்ணாரத் தான்பார்த்து
ஆனந்த வாரி யருள்பார்த்து—வானத்தை
யெட்டுந் திரைபார்த் திசைகொத் தளம்பார்த்துட்
(?)செட்டுவினை தேர்த்திண் டிறம்பார்த்து—இட்டமுள

(பிரதி)—[1]கன்றுகள்.

கோபுரமு மண்டபமுங் கோவிலுமே தான்பார்த்து
மாபுரத்தின் வீதி வகைபார்த்துத்—தீபம்வளர்
வேதபா ராயணஞ்சொல் வேதியர்கள் வேள்விசெயு
மாதிநூல் வீதி யருட்பார்த்து—மாதவர்கள்
பூசை செயுமிடத்தின் பொற்புகளைத் தான்பார்த்து
வாசமுள வீதி வளம்பார்த்துத்—தேசுவளர்
வேந்தர் முரசதிரும் வீதிகளுந் தான்பார்த்துச்
சாந்தணியும் மங்கையரைத் தான்பார்த்து-மாந்தர்மகிழ்
வரார் குபேர னிணையாத் தனம்படைத்த
சீரார் வசியர் தெருப்பார்த்து—ஆராய்ந்த
சற்சூத் திரவீதி தான்பார்த்து மற்றுமுள்ளோ
ரிற்சேரும் வாடை யினைப்பார்த்து—அற்சேருங்
கூந்தலார் தம்முடனே கூடி யிருக்கையிலே
சாந்து புழுகுமணந் தாமோங்க—வேந்துமகிழ்
றூபங் கமழச் சுகந்தம் பரிமளிக்கத்
தீப மநேகஞ் சிறந்துவரத்—தாபமக
லாலவட்டம் வீச வரிய குடைநிழற்ற
ஞாலவட்டஞ் சொல்சோம நாதனார்—நீலவட்டத்
தேரேறி வந்த திருக்கண்டாள் செய்யவிதழ்த்
தாரேறு மார்பிதழி தான்கண்டாள்—வாரேறு
பூண்முலையாள் பாகம் பொருந்துமிடங் கண்டாணம்
வாண்முலைமேற் சேர்வதெந்த வாறென்றாள்—வீண்மொழிகள்
பேசுகின்ற வெல்லையினிற் பேரா யிரமுடையான்
றேசுபெறுந் தேருமப்பாற் செல்லவே—வீசுமதன்
கைச்சிலையை வாங்கிக் கணைதொடுத்தா னங்கவட்கு
நச்சிலைவேற் கண்ணீர் நயந்துவிழப்—பொய்ச்சவிடை
தள்ளாடி யேகலைக டாமகலக் கைவளைக
ளுள்ளாடிப் பைந்தொடிக ளுய்த்துவிழ—நள்ளார்போற்
கூவக் குயிலினங்கள் கோளின்மதி தீச்சொரிய
வாளொத்த கண்ணாள் மயங்கையிலே—நாளொத்த

தாய ரெடுத்தணைத்துத் தன்மா ளிகைபுகுந்து
மேயபுத்தி யெல்லா மெடுத்துரைத்துப்—பாய
லொரு[ங்]குவைத்து மெத்தையினி லொக்கவிருத்தித்
தெரியத் தெளியவைத்தாள் செவ்வே—யரிவை

அரிவை

கருமை தருமுகிலுங் காந்திசெறி மின்னுந்
தெரியு மிருசிலையுந் தேனார்—பெருமைபெறு
மாம்பலுநீ லோற்பலமு மானசிறு வள்ளைகளுங்
கூம்பாத வம்புயமுங் கோத்தமுத்துங்—காம்புகளுந்
தேங்குந் திருவறலுஞ் சேர்ந்தசிறு வாழைகளு
மோங்கியொன் றான வுருவத்தாள்—மாங்குயிலை
யொத்த மொழியா ளுயர்காம னூலையெலாங்
கற்றறிந்து சொல்லுங் கருத்தினாண்—முத்தலைசேர்
சூலம் பிடித்தியமன் சுற்றுமற் காமுகரை
யாலஞ்சேர் கண்ணா லடக்குவாள்—கோலமுடன்
செங்கை வளையணிந்து சிந்தூரப் பொட்டுநுதன்
மங்கலஞ்சேர் கூர்விழிக்கு மையெழுதித்—தங்கநிற
மேகலைக ணன்றாய் விளங்கக் கலைசாத்தித்
தாகமுடன் காலுக்குத் தண்டையிட்டுப்—பாகனைய
சொல்லா ருடன்கூடிச் சோதிமணி மண்டபத்தில்
வல்லாருங் கொங்கையாள் வந்தணுகிச்—சொல்லுவாள்
மானே யிளங்குயிலே வல்லியே பெண்ணரசே
தேனே தெவிட்டாத தெள்ளமுதே—நானுரைக்குஞ்
சித்திரங்கள் பாரீர் தெருப்பாரீர் கோயிலுட்
சத்தமது பாரீர் தடம்பாரீர்—நித்தியமாய்க்
கோபுரங்கள் பாரீர் கொடிக்கம்பந் தான்பாரீர்
மாபுரத்தோர் போற்றும் வகைபாரீர்—தீபம்வளர்
நந்தி யிருக்கு நலம்பாரீ ரங்குசஞ்சேர்
தந்தி யிருக்குந் தலம்பாரீர்—கந்தமலர்க்

கூந்தலா டெய்வானை கோலமுள்ள வள்ளியம்மை
காந்தன் மகிழ்கருணைக் கண்பாரீர்—சாந்தமால்
சேரு மிலக்குமியின் சீர்பாரீர் நான்முகத்தோன்
காரிகையாம் பாரதியின் கண்பாரீர்—சேரும்
வயிரவர்தங் கோயிலுடை வண்மை களைப்பாரீர்
செயிரறுதண் ணார்சுதைசேர் திங்க—ளுயரவைத்த
சோமேசர் தாமிருந்த சோதிதனைப் பாரிரென்று
நாமம் புகலவந்து நங்கைதான்—காமமுடன்
றேவிக் கொருபாகஞ் செய்தபிரா னாசையுற்ற
பாவிக்குச் சற்றுங்கண் பாராரோ—நாவினா
லேத்து மிருடியர்க்கு வென்[னெ]ன வெத்தினவர்[யிற்
காத்தெனக்குக் கண்பார்வை காட்டாரோ—சாற்றுகை
கிள்ளையே யென்றன் கிளியே யரும்பொருளே
யுள்ள மகிழ்ச்சிதரு மொண்சுகமே—கள்ளமிலா [மே
வென்மனமே கண்ணேயென் னெண்ணநிறை வேறவு
யுன்மனமே யல்லான்மற் றொன்றுண்டோ—நன்மைபெறுஞ்
சோமேசர் மார்பிதழித் தொங்கல்கொணர்ந் தாலெனக்
காமேச னம்பிடுக்கங் காட்டாது—பூமேவுந் [குக்
திங்கள் குளிர்ந்திருக்குந் தீய குயிற்கூவா
தங்கம் பசலைநிற மாகாது—மங்கைமார்
பங்கமுறப் பேசார் பழியார்நம் மன்னையர்க
ளிங்கெனக்குச் செய்வா யெனுஞ்சமயம்—சங்கரனார்
தேரிப்பாற் செல்லத் திகைத்தாள் சிலைமாரன்
பாரிலிக்கு வில்வளைத்துப் பண்சுரும்பை—நாரியெனப்
பூட்டிவிடத் தான்கணையைப் பொன்னாரந் தான்விடுத்தாள்
பாட்டிசைக்கும் வீணைதனைப் பாரில்வைத்தாள்-கேட்டவன்னை
கட்டி யணைத்துக் கலங்காமன் மாளிகையி
லிட்டமுள தோழி யிணையிருத்தி—வட்டமுள
வாலவட்டம் வீசினா ரார்த்தார்முத் தாரவடஞ்
சாலவைத்த[ார்] சாந்தந் தனத்தின்மிசை—சீல[ம்]

வரிசையினுற் றேற்றும் வகையா லரிவை
யுரிய மனந்தெளிந்தங் குற்றாள்—தெரிவைமுனம்

தெரிவை

பாற்கடலி லேபிறந்த பங்கயமா திவ்வழகை
யேற்கவுமே லான வெழிலினுண்—மாற்பெருகு
தேரு மிருஞ்சிலையுஞ் செங்கையம்பு மொன்றான
மாரனையொப் பான வடிவினுள்—பாருலகில்
வண்டேறு தார்புனைந்து வன்புழுகு நள்ளிருளுங்
கொண்டே கறுத்த குழலினுள்—விண்டிலா
மீனைப் புனலில் விடுத்து மிரள்மானைக்
கானிற் றுரத்துமிரு கண்ணினு—ளானையின்றன்
கோட்டைப் பழித்துக் குலுங்காத மேருவமை
சூட்டி யிருத்துந் துணைமுலையா—ளூட்டமுட
னீளுமன மும்மடியி னீங்காம னின்றநடை
நாளும் பயிலு நடையினுள்—வாளனைய
கண்ணா ருடன்றனது கையில்வைத்த வீணையினுல்
பண்ணா விராகப் பதம்பாடி—மண்ணுள
ராடரங்கு மாளிகையு மாவணநல் வீதிகளு
நாடிமணி மண்டபத்தி னண்ணியே—சேடியர்கள்
சொல்லா விசையாற் றுணைச்செங் கரம்பிடித்து
மெல்ல விளையாடும் வேளையினிற்—பல்லியங்கள்
நீடாழி போன்முழங்க நித்திலத்தா னீள்கொடிகள்
வாடாப் பரிசை மணிக்குடைகள்—கூடியே
ஓடுங் குதிரை மறைக்க வுயர்தலத்தோர்
நாடும் புகழ்ச்சோம நாதனு—ராடகப்பொற்
றேரையுங்கண் ணுற்கண்டு சிந்தை மகிழ்ந்துமவ
ரேரும் பெருமையுங்கண் டேயிசைப்பாள்—பாரில்விட

முண்ட வழகு முயர்வா ணகையழகுங்
கண்ட நுதலிலகு கண்ணழகு—மண்டர்புகழ்
காதி னழகுமதிற் காணவே சாத்துகின்ற
கோதிலாச் சங்கக் குழையழகு—மோதரிய
மானி னழகு மழுவின் கரத்தழகுந்
தேன்மொழியாள் வாமத்திற் சேரழகுங்—காணின்
கடுக்கைமலர்க் கண்ணியார் காணவணி மார்பி
லடுத்ததங்க மாலை யழகு—முடுத்த
புலியி னதளிறுகப் பொங்கரவின் கச்சை
யலர விறுக்கு மழகுஞ்—சொலவல்லோர்
பாடுங் கமலப் பதத்தா மரையழகு
நாடுமுப்பந் தொட்டிநகர் நல்லழகு—நாடியே
காத லுடனே களித்தா ளவர்மார்பிற்
கோதைதனை வாங்கிவந்தாற் கோதையே--யோதுமனத்
துண்ணோ யகலு முயிர்காத்த வாறுமென் [ன்
கண்ணே யெனப்புகலுங் காலையினில்—விண்ணவர்கோ
சென்றான் மலர்வாளி தேமாங் குயிற்காளம் [றனுமே
வென்றேனென் றாதவும்வேள் மேல்விடுத்தான்-றென்
சீறுபுலி போல்வரவே திங்க ளனல்வீசக்
கூறு கடன்முரசங் கோடிக்க—வாறுதலை
யில்லாம லன்னையர்க ளோச மிகமெலிந்தாள்
சொல்லாற மாலையப்பாற் றாக்கினு—ணல்லார்கள்
வேர்த்தவளைக் கைப்பிடித்து மேன்மா ளிகைபுகுந்து
பார்த்துமிகத் தேற்றிப் பசுங்கிளியே—சீர்த்திபெற
வாரளிப்பார் மாலை யகந்தெளிந்த வெம்மைப்போற்
சீரழிக்கா தேயெனவுந் தேறினுள்—பேரிளம்பெண்

பேரிளம்பெண்

பெண்ணிற் பெருக்கமுள பெண்பெருமாண் மாரனுடன்
வண்ணச்செங்கோனடத்தும்வல்லமையா—ளெண்கலவி

வித்தை [1]பெறத்திருத்தி மேலாஞ் சுரதவிதம்
பற்றிப் படிக்குப் பழக்கவல்லாள்—வெற்றிபெற
மின்னும் பிறையணிந்த வேணிக்கு வேணுமென்றாற்
பின்னு[2]முள தென்ற பிறைநுதலாள்—பன்னரிய
கைம்மானை வென்று கருநஞ் சுடன்பழகி
மைம்மா னிதென்ற மலர்க்கண்ணாள்—செம்மான
வேணியரன் கண்டத்தின் மேலாலம்போ னானங்
காண வணிந்த கழுத்தினாள்—கோனுகம்பங்
கட்டுண்ட மாதங்கங் காணத் தனந்தினையே
முட்டக் குனிந்த முறைபோல—வட்டமணிக்
கச்சதனாற் கட்டக் கரைந்து தலைகுனிந்து
மெச்சுதர மீது விழுமுலையா—ளிச்சையுட
னாலல் படவக்கை யன்றணிந் தார....
மாலை விளங்குதிரு மார்பினாள்—காலுழுவைத்
தோலை யரையதனிற் சுற்றினவர் போற்சித்ரச்
சேலை யணிந்தவரிச் சிற்றிடையாள்—காலின்மணி
கட்டு மரன்போலக் கண்டை தண்டை பொற்சதங்கை
யிட்ட கமல விருபதத்தாள்—விட்டமத
வானை வணங்கிடவு மாலமழு தாயிடவு
மீன கடற்கன் மிதந்திடவு—மூனமுற்ற
நீற்றறைநீ றாயிடவு நித்தனையே பாடுமவர்
மாற்றரிய சொல்லு மனத்திலுன்னித்—தேற்றிக்
கரட மதகரிமேற் காணவெள்ளி யான [வுள்ளி
வரையினிற்சென் றோருரையும் வாழ்த்தித்—தெரிய
யோடுவைகை யாற்றினெதி ரோடத்தே வாரத்தி
னேடு விடுத்தவர்சொல் லின்னுரையும்—நாடியுன்னிப்
பாண்டியன்முன் னேநரியைப் பாய்பரியா கக்கொடுத்து
நீண்ட புகழ்படைத்தோர் நீளுரையும்—வேண்டி

(பிரதி)—[1]யெறத்திக்கி. [2]முனறனறடொ.

யிதுவே பொருளென வெண்ணித் தினமு
மதியே விளங்கு மனத்தா—டுதிசெய்முன்னாள்
பத்தி லொருபிரமன் பாவி யெனுந்தக்கன்
முற்றுமொரு திங்களுக்கு மூவொன்பான்—சித்ரமணிப்
பெண்களையே நல்கவந்தப் பெண்ணி லதிரூபத்
தண்களையாம் ரோகிணியுஞ் சார்வாக—விண்பிறழுஞ்
சித்திரையு மன்பாகச் சித்தத்தி லேநினைத்த
புத்தியினான் மற்றோர் புழுங்கியே—யுற்றிருக்குந்
தந்தையுட னேயுரைக்கத் தான்கோப மாகியந்த
விந்துவினை யப்போ விழைந்தழைத்துப்—பந்தமுற
நல்லாரை யாமளித்தா னாடி யவரவரைப்
புல்லா வகையென் புகலுமெனச்—சொல்லார்ந்த
வென்னழகுக் கொப்பான வேந்திழையே யல்லாமற்
பண்ணுமற்றோர் தம்மையுநான் பாரேனென்—றின்னல்
வாயாரச் சொன்னளவில் மாறுபா டாய்த்தக்கன் [பெற
றீயான கோபந் திரண்டுதான்—பாயவே
சாபம் பிடியென்னச் சார்ந்த சவிமழுங்கக்
கோப மிகுந்து கொடுத்தளவிற்—சோபமுடன்
சற்றுசற்று யோனிக டான்மழுங்க மால்பிரம
ருற்ற மகவா னுடன்றேவர்—பெற்ற
பதிபுகுந் திச்சாபம் பற்றவே யிப்போ
துதிபெறவே யீயுமென்று சொல்ல—மதிமயங்கித்
தக்கனார் தானிட்ட சாபந் தொலைத்திடநாம்
மிக்கவரல் லோமென்ற வேளையினில்—தக்கமொழி
நாரதனார் சொல்ல நவின்றமொழி யின்படியே
வாரிதனைச் செஞ்சடைமேல் வைத்தபிரான்—சீர்திகழ
நாமம் பலபுகன்றா னன்மைசெய்ய மூவுலகில்
ஏமநிதி நின்னையல்லா லில்லையெனப்—பூமலியும்
வேணி யரன்சாபம் வீழ வருள்செய்தான்
வாணிலவும் பேர வளர்ந்தானே—நீணிலத்தில்

பூமிதிருத் தேராய்ப் புகன்றமதி வெம்பருதி
நேமியாய்த் தேவர் நிரைகாலாய்—மீமா[ன்]
கொடுங்கையா[ன்] மேரு குழைவில்லாய் நாணி
யிடுஞ்சேட னாகி யிசைய—விடுங்கணையு
மாலாய்ச் சமர்க்களத்தில் வந்தபொழு தங்கவர்கண்
மேலாய் நினைத்த விதங்கண்டு—சாலவே
முப்புரத்தை வெண்ணகையின் மூளுங் கனலாலே
மைப்பறவே யன்றெரித்த மாதேவ—ரிப்புவியி
லொண்ணா யிரம்பே ரிருட்டாரு காவனத்திற்
பண்ணார் மொழியார் [1]பலிதரப்பின்—நண்ணியே
கேள்வியொரு மந்திரத்தாற் கிட்டியநெய் யாற்சமித்தால்
வேள்விசெய் தாரந்த வேள்வியினிற்—சூழிமத
வெங்களிறுண் டாகவதை மெய்ப்பொருளாய் வேதாந்த
சங்கரன்பா லேவவதைத் தானிடிக்க—வங்கவர்கண்
மானைவிடுத் தாரதனை வன்கரத்தி னாற்பிடித்தார்
கான மழுவைக் கரத்தணிந்தா—ரானபின்
பாங்கவர்தம் வேள்வி யழிக்கவொரு வேடங்கொண்
டேங்கி யவர்க ளிளைக்கவே—பூங்குழலார்
கண்டு மயங்கக் கலைசோர வங்கவர்க
ளொண்டொடிக[ள்] சோர வுலாவவே—பண்டாங்கு
வீதியில்வந் தாரவர்கண் மெய்கலங்கி நாணழிந்து
வோதுமயல் கொண்டங் குடன்றொடர்ந்தார்—வேதனுடைத்
தந்தையைப்பெண் ணாக்கித் தவத்தை யழியுமென
வந்தார் தவத்தார் மயங்கினா—ரிந்தவகை
யாலேதம் வேள்வி யலைந்து மவமானார்
வேலேந்து கையான் விளங்கவே—மாலேந்தப்
பெற்றான் றனக்கிளையாள் பேசவல்லா ளெக்கலையுங்
கற்றான்பின் செல்லுங் கருணைவள்ள—லுற்றான்கண்

(பிரதி)—[1]பலிறறதபபி.

மேவு திருப்பாடி வீற்றிருக்குஞ் சுந்தரியா
ராவலுடன் வாமத் தமர்ந்தபிரா—னாவலர்சொ
னற்சோம நாதர் நயந்ததிருத் தேர்கண்டு
விற்சேர் கலைநெகிழ மின்றொடிகண்—முற்சோர
நின்று கலங்கிவரும் [ெ]நட்டுயிர்ப்பி னாலவளும்
வென்ற பலசொல் விளம்புவாள்—கன்றுமான்
சேரப் பிடித்தீர் திரும்பவொரு மான்செங்கை
யாரைப் பிடித்தாலங் காகாதோ—நீருமைக்குப்
பாகங் கொடுத்தீர் பணியுமொரு பாவைக்கோர்
பாகங் கொடுத்தாற் பழிப்புண்டோ—வாகுவினிற்
சேரு மிதழியந்தார் சிந்தை மகிழ்ந்தெனக்குத்
தாருமுமைக் கட்டித் தழுவினா—லாரினித்தான்
தள்ளுவார் தேருடனீர் தாமப்பாற் சென்றக்கா
லுள்ளமட லூர வுளமகிழ்ந்தேன்—வள்ளையெனுங்
காதார்போ னான்விடேன் கண்ட திருநீறும்
போதார மார்பும் புயத்தழகுங்—காதலுட
னேத்து மவர்கிடீ ரென்றென்று மென்றுசொல்லிற்
றேற்றுமவ ளாசை தெளிந்திடவே—போற்றியே
பார்த்தாள் மனமுருகப் பண்ணி யினியென்கை
வேற்றுள்போற் சென்றேகி விட்டனர்கா—ணேத்தரிய
மின்னா ரிவரெழுவர் மேலும் மயலாகப்
பொன்னா ரிதழியந்தார் பூணுவா—ரெந்நாளுந்
திங்களன் பாய்ப்பூசை செய்முப் பதப்புரத்திற்
பொங்கிநிதி மல்கவரும் பொற்சடையா—ரெங்கு
நிறைந்தபிரா னன்பரிட நீங்காம லென்று
முறைந்தபிரான் வந்தா னுலா.

முப்பந்தோட்டியுலா முற்றும்.

[**குறிப்பு** :—முப்பந்தொட்டி என்பது தொண்டை நாட்டில் ஆர்க்காடென (ஆறுகாடு) வழங்கும் நகரின் ஒரு பகுதியாகப் பாலாற்றங்கரையில் உள்ளதொரு சிவதலம்.

வசிட்டர் இராமபிரானுக்குத் தத்துவமசிமகாவாக்கியப் பொருளை யுபதேசித்த தலமாகையால் முப்பதப்புரம் எனவும், வீரசம்புவராய

னென்னும் அரசன் ஆட்சிபுரிந்த காலத்தில் இந்நகரை வடக்கே இருந்து படையெடுத்து வந்த யாதவராயன் என்பவன் ஆறாண்டு முற்றுகையிட, வீரசம்புவன் படையழிந்து வருந்தி, பின் காளபயிரவரருளால் தனியே நின்று யாதவனை ஒட்டி வெற்றிபெற்றமையால் **அழிபடை தாங்கி** என்றும், சந்திரன் பூசித்துச் சாபம் நீங்கிய தலமாகையால் **சோமநாதபுர** மென்றும், வேறு பல பெயர்களும் இத்தலத்திற்கு வழங்கும். விஜயநகரவரசரான கிருஷ்ணதேவராயருடைய பட்டமகிஷி கொண்டம்மா, இராமபத்திர தீட்சிதர் வேங்கடபதி தீட்சிதரென்ற பெரியார் இருவர் விருப்பத்திற்கிணங்க, இந்நகரில் அக்கிரகாரப் பிரதிஷ்டை செய்வித்த செய்தி பழைய குறிப்பொன்றால் அறியக் கிடக்கின்றது.

இத்தலத்திற் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள சிவபிரான் திருநாமம் சோமநாதர்; அம்பிகை பெயர் சௌந்தரவாலாம்பிகை.

இப்பிரபந்தத்தை இயற்றியவர் சிதம்பரத்தில் வாழ்ந்த சிவப்பிரகாசரென்பது இவ்வுலாவின் 148-ம் கண்ணியால் உய்த்துணரத்தகும். இவர் வீரசைவ மதத்தினர். அரும்பொருள் விளக்க நிகண்டைச் செய்த அருமருந்த தேசிகரின் பிதாவாக இவர் இருத்தல் கூடும். அங்ஙனமாயின் பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இவர் வாழ்ந்தவராவர். இவரைப்பற்றிய பிறசெய்திகள் விளங்கவில்லை.

இந்நூற் கையெழுத்துப் பிரதியொன்று, அரசாங்கத் தொன்னூல் நிலையத்தில் படிக்க வியலாமல் எழுத்துக்கள் மறைந்து பழுதுபட்ட நிலையிலிருந்ததைக் கண்டு பிரதியழிவுறா வண்ணம் காப்பதே தக்கதெனக் கருதி, சில நண்பர்களின் நன்முயற்சியால் இந்நூல் வெளியிடப்படுகின்றது. அந்நண்பர்கட்குச் சமாஜத்தின் நன்றி பெரிதும் உரித்து.]

யாகத்தில் உயிர்ப்பலி

[பத்திராசிரியர்]

கும்பகோணத்திலும் கடலாடியிலும் நடைபெற்ற யாகங்களில் நிகழ்ந்த உயிர்ப்பலியை நமது சமாஜம் பலமாகக் கண்டிக்கிறது. ‘அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன் - உயிர்செகுத் துண்ணாமை நன்று’ என்ற தமிழ் வேதவாக்கு சைவ சமயத்துக்கு முற்றிலும் உடன்பாடு.

தன்மையும் பசுத்தன்மையும் தொலைத்தவனை, எல்லா உயிரும் வணங்குகின்றதில்லைத் திருச்சபையிற் காணலாயினேன்.

குறிப்பு:—வனப்பு = அழகு, புனிதம். பாசம் - ஆணவம், பசு - தன்னுணர்ச்சி. சு

சாதிகுலம் பிறப்பென்னுஞ் சுழிப்பட்டுத் தடுமாறும்
ஆதமிலி நாயேனை அல்லலறுத் தாட்கொண்டு
பேதைகுணம் பிறருருவம் யானெனதென் னுரைமாய்த்துக்
கோதிலமு தானானைக் குலாவுதில்லை கண்டேனே.

உரை:—வருணம், குலம், குடிப்பிறப்பு என்பவற்றின் சுழியிலகப்பட்டு, அவற்றால் ஏற்படும் பற்றுக்களால் அறிவுதடுமாறி, ஆதரவில்லாதேனுகிய நாயேனது பிறவித் துன்பத்தைத் தொலைத்து நாயேனை அடிமையாகக் கொண்டு, என் அறியாமைக் குணம், பிறர் வடிவின் நினைவு, யான் எனது என்ற செருக்குமொழி என்பவற்றைக் களைந்து, குற்றமற்ற சாவாமருந்தானவனை, (அருள்) விளங்குகின்ற தில்லைச் சபையிற் கண்டேன்.

குறிப்பு:—வருணம், பெரும்பிரிவு, குலம் அதனுட் பட்டது. அதனினுட்பகுதி, குடிப் பிறப்பு. ஆதம் = ஆதரவு, பிறருருவம் - பிற தெய்வத் தோற்றம் என்று முரைக்க. ‘குலாவு’ என்பதற்கு ஞானம் விளங்கும் என்று முரைப்பர். ரு

பிறவிதனை அறமாற்றிப் பிணிமூப்பென் றிவையிரண்டும்
உறவினொடும் ஒழியச்சென் றுலகுடைய ஒருமுதலைச்
செறிபொழில்சூழ் தில்லைநகர்த் திருச்சிற்றம் பலம்மன்னி
மறையவரும் வானவரும் வணங்கிடநான் கண்டேனே.

உரை:—பிறவிமுற்றிலும் மாறப்பெற்று, நோய், முதிர்ச்சி என்பவையிரண்டும் சுற்றத்தார் பற்றினோடு நீங்கும்படியாகப் போய், உலகத்தை உடைய ஒப்பற்ற முதல்வனை, அடர்ந்த சோலை சூழ்ந்த தில்லை நகரத்தின்கணுள்ள ஞானசபையினை யடைந்து, வேதியரும் விண்ணவரும் வழிபடுவதை நான் பார்த்தேன்.

குறிப்பு:—‘பிணி, மூப்பு உறவினொடு மொழிய’ என்பதற்குப் ‘பிணி, மூப்பு முதலியன தமக்கில்லாது சுற்றத்தாரோடு ஒழிய’ என்று தி. உகூ

முரைப்பர். பிறவியொழிந்த விடத்தே, பிணி, மூப்பு, சுற்றப்பற்று முதலியன ஒழிதல் இயல்பே. கூ

பத்திமையும் பரிசுமிலாப் பசுபாசம் அறுத்தருளிப்
பித்தனிவன் எனஎன்னை ஆக்குவித்துப் போமே
சித்தமெனுந் திண்கயிற்றால் திருப்பாதங் கட்டுவித்த
வித்தகனார் விளையாடல் விளங்குதில்லை கண்டேனே.

உரை:—எனது பசுத்தன்மையையும் மலக்கட்டினையும் நீக்கியருளி, அன்பும் பண்புமில்லாத பித்தன் இவனுவன் என்று என்னை உலகினர் கூறும்படி செய்வித்து, நான் பெயர்ந்து போகாவண்ணம், நினைவு என்கின்ற வலிய கயிற்றினால் என்னைத் திருவடியிற் கட்டுவித்த அறிஞராய பெருமானது திருவிளையாடலை, (அருள்) விளங்குகின்ற தில்லையின்கண் பார்த்தேன்.

குறிப்பு :—பத்திமை=அன்புடைமை. பரிசு=பண்பு. பசு=தன்னினைவு. பாசம்=கட்டு. வித்தகனார்=கல்வியாளர்; அறிஞர். எ

அளவிலாப் பாவகத்தால் அமுக்குண்டிங் கறிவின்றி
வினையொன்றும் அறியாதே வெறுவியனாய்க் கிடப்பேனுக்(கு)
அளவிலா ஆனந்தம் அளித்தென்னை ஆண்டானைக்
களவிலா வானவருந் தொழுந்தில்லை கண்டேனே.

உரை :—அளவில்லாத எண்ணங்களால் அழுத்தப்பெற்று நல்லறிவில்லாமல், செய்யுஞ் செய்தியின் பயனாக எதிர்காலத்தில் வருவதொன்றையும் அறியாது பயனற்றவனாய்க் கிடக்கு மியல்புடைய எனக்கு எல்லையிலாத பேரின்பம் ஈந்து என்னை ஆட்கொண்டவனை, வஞ்சமில்லாத தேவர்களுந் தொழுகின்ற தில்லையின்கட் கண்டேன்.

குறிப்பு :—பாவகம்=நினைவு; கற்பனை. அறிவின்றி=அறிவு விரிதற்கிடமின்றி. வெறுவியன் = வெறுமையன் ; பயனற்றவன். களவிலாமையால், வானவர் தில்லையிற் றொழுவாராயினர் என்ற குறிப்புக் காண்க. களவிலா=சூழ்ச்சியற்ற; தூய்மையான 'வானவரும்' என்பதில் உம்மை, பிற அடியாரையுந் தழுவியது. அ

பாங்கினொடு பரிசொன்றும் அறியாத நாயேனை
ஓங்கியுளத் தொளிவளர உலப்பிலா அன்பருளி

வாங்கிவினை மலம்அறுத்து வான்கருணை தந்தானை
நான்குமறை பயில்தில்லை அம்பலத்தே கண்டேனே.

உரை :—(இறைவனை நாடும்) முறையும் பயனும் ஒரு சிறிதும் தெரியாத நாயேனுக்கு உள்ளத்தே ஞானவொளியானது தழைத்து மிகும்படி, முடிவில்லாத அன்பினைத் தந்தருளி, எனது வினைகளைத் தன்பாலேற்றுப் பாசத்தைக் களைந்து உயர்ந்த பேரருள் புரிந்தவனை, நான்கு வேதங்களும் முழங்குகின்ற தில்லைத்திருச் சபையிற் காணலாயினேன்.

குறிப்பு :— பாங்கு=முறை. பரிசு=பயன். 'உளத்தொளி ஓங்கி' என மாறுக. உளத்தொளி=உயிரினறிவிற் கலந்த இறையறிவு. உலத்தல்=வற்றிப்போதல். 'வாங்கு' என்பதற்குக் கழித்து என்றும் பொருளுரைப்பர். மலம்=ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்கள். நான்குமறை=நால்வகை வாக்குக்கள்.

பூதங்கள் ஐந்தாகிப் புலனாகிப் பொருளாகிப்
பேதங்கள் அனைத்துமாய்ப் பேதமிலாப் பெருமையனைக்
கேதங்கள் கெடுத்தாண்ட கிளரொளியை மரகதத்தை
வேதங்கள் தொழுதேத்தும் விளங்குதில்லை கண்டேனே.

உரை :—ஐம்பூதங்களை வடிவாகக் கொண்டும், மனத்தால் அறியுமறிவாகியும் உலகிலுள்ள எல்லாப் பொருள்களும் ஆகியும் அப்பொருள்களின் வேறுபாடுகளெல்லாம் ஆகியும், தன்னியல்பில் மாற்றமில்லாத பெருந் தன்மையுடையானை, துன்பங்களைத் தொலைத்து ஆட்கொண்ட, தானே விளங்கும் ஒளிபோல்வானை மரகதமனையானை ஞான நூல்கள் வணங்கி வாழ்த்தும் அருள் விளங்குந் தில்லையிற் காணலாயினேன்.

குறிப்பு :—எல்லாவற்றிலும் அத்துவிதமாய்க் கலந்திருத்தல் பற்றி 'எல்லாமாகி' என்றார். புலன்=மன அறிவு. ஐம்பொறி யறிவென்றுங் கொள்ளுவர். வேதங்கள் பயின்றோர்க்கு வேதங்கள் ஆகுபெயர். கேதங்கள்=துன்பங்கள். மரகதம், அம்மையின்நிறம். அருட்சத்தியும் அவன் வடிவேயாதலின், 'மரகதத்தை' என்றார். க0

திருச்சிற்றம்பலம்

திருப்பெருந்துறையில் அருளிய

பிரார்த்தனைப்பத்து

சதாமுத்தி

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

கலந்து நின்னடியா ரோடன்று வாளா களித்தி ருந்தேன்
புலர்ந்து போன காலங்கள் புகுந்து நின்ற திடர்பின்னாள்
உலர்ந்து போனேன் உடையானே உலவா இன்பச் சுடர்காண்பான்
அலந்து போனேன் அருள்செய்யாய் ஆர்வங் கூர அடியேற்கே.

உரைநடை:—அன்று என்பதை முதலிற் கொள்க. அடியேற்கே ஆர்வங் கூர அருள் செய்யாய் எனக் கொள்க.

உரை :—(நீ என்னை யாட்கொண்ட) அந்நாளில் உனதடியாரோடு கூடிச் சும்மா மகிழ்ந்திருந்தேன். அவர்கள் பிரிந்த பின் கூடிக்களித்த காலங்களெல்லாம் கழிந்து போயின. பின்னாளில் துன்பம் ஏற்பட்டு நிலை பெற்றது. உடையவனே யதனால் நான் வாடிப்போனேன். என்றுங் கெடாத பேரின்பத்தைத் தருகின்ற சோதியைப் பார்க்க விரும்பிப் பார்க்கப்பெறாது வருந்தினேன். அடியேனுக்கு அன்பு மிகும்படி அருள் செயவேண்டும்.

குறிப்பு:—வாளா என்பது அன்பு செலுத்தாமையைக் குறிக்கும். புலர்ந்து=விடிந்து, கழிந்த நாட்களும், மாதங்களும் பலவாயினமையின் காலங்கள் என்றார். மதுரையிற் பாண்டியன் முதலியோர்க்கு பதிற் சொல்ல வேண்டியிருந்ததை இடர் என்ற சொல் குறிக்கும். இறைவனைப் பிரிந்த ஆற்றாமையும் இடரே. அலந்து = எண்ணியது கிடைக்கப் பெறாது வருந்தி. க

அடியார் சிலருன் அருள்பெற்றார் ஆர்வங் கூர யான்
அவமே, முடையார் பிணத்தின் முடிவின்றி முனிவால் அடி
யேன் மூக்கின்றேன், கடியேனுடைய கடுவினையைக் களைந்

துன் கருணைக் கடல்பொங்க, உடையாய் அடியேன் உள்ளத்
தே ஓவா துருக அருளாயே.

உரைநடை :—உடையாய் என்பதை முதலிற் கொள்க. சிலர் என்பதை ஆர்வங் கூர என்பதோடு முடிக்க.

உரை :—முதல்வனே! அடியார் சிலர் அன்பு மிகுதியினால் உன் திருவருளைப் பெற்றார்கள். யானோ வீணாகப் புலால் நாற்றம் நிறைந்த பிண உடம்பிற்கு ஓர் முடிவின்றி அதிவிருக்கப் பெற்ற வெறுப்பினால் அடியேன் முதிர்ச்சியுற்றேன். கடுமையான குணத்தையுடைய எனது கொடிய வினைகளைத் தொலைத்து உன்னுடைய அருட்கடலானது அடியேனுடைய உள்ளத்திற் பொங்கும்படியாக ஓயாது அன்பில் உருகுவதை எனக்கு அருள் செய்வாயாக.

குறிப்பு :—இழிவுபற்றியும், அன்பின்மை பற்றியும் உடம்பைப் பிணமென்றார். முடை=புலால் நாற்றம்; தீய வாசனை. வெறுக்கத்தக்க தன்மை தன்னிடத்தில் அதிகப் படுவதாகக் கூறுவார் முனிவால் மூக்கின்றேன் என்றார். கடியேன்=உருக்கமில்லாத நெஞ்சுடையேன். பொங்க=விளங்க வென்று முரைப்ப. உ

அருளா ரமுதப் பெருங்கடல்வாய் அடியா ரெல்லாம்
புக்கழுந்த, இருளா ராக்கை இதுபொறுத்தே எய்த்தேன்
கண்டாய் எம்மானே, மருளார் மனத்தோர் உன்மத்தன் வரு
மால் என்றிங் கெனைக்கண்டார், வெருளா வண்ணம் மெய்
யன்பை உடையாய் பெறநான் வேண்டுமே.

உரை :—முதல்வனே ! திருவருளாகிய கிடைத்தற்கரிய அமுதப் பெருங்கடலின்கண் அடியாரெல்லாம் புகுந்து திளைத்தாடவும், அறியாமை நிறைந்த உடம்பாகிய இதனைச் சுமந்து இளைத்தேன். எமது தலைவனே ! மருட்சி பொருந்திய மனத்தை உடைய ஒரு பித்தன் வருகின்றானென்று இவ்வுலகிலே என்னைக் கண்டவர்கள் சொல்லி அஞ்சாவண்ணம், (வீடடைதற் பொருட்டு) நான் உண்மையான அன்பைப் பெறுதல் வேண்டும்.

குறிப்பு :—வருமால் என்பதில் ஆல் அசை. வெருளுதல்= மருளுதல்; அஞ்சுதல்.

வேண்டும் வேண்டும் மெய்யடியா ருள்ளே விரும்பி
எனைஅருளால், ஆண்டாய் அடியேன் இடர்களைந்த அமுதே
அருமா மணிமுத்தே, தூண்டா விளக்கின் சுடரனையாய்
தொண்ட னேற்கும் உண்டாங்கொல், வேண்டா தொன்றும்
வேண்டாது மிக்க அன்பே மேவுதலே.

உரைநடை :—வேண்டுமென்பதை மேவுதலே என்பதனோடு முடிக்கலாம்.

உரை :—தன்னை விரும்பிநின்ற மெய்யடியார்கள் நடுவே என்னை வைக்க விரும்பித் திருவருளாலெனை யாட்கொண்டவனே! அடியேனுடைய பிறவித் துன்பத்தை நீக்கிய அருமருந்தே! கிடைத்தற்கரிய பெரிய மாணிக்கமே! முத்தே! தூண்ட வேண்டாது தானே யெரியும் விளக்கின் கொழுந்து போன்றவனே! அடியனேற்கும் விரும்பத்தகாததொன்றையும் விரும்பாது உயர்ந்த அன்பினையே பொருந்துதலாகிய செய்கை யேற்படுமோ அஃதே எனக்கு வேண்டும்.

குறிப்பு :—வேண்டும் வேண்டுமென்பதற்கு இடைவிடாது விரும்புமென்றும் பொருள் கொள்ப. இறைவன் இயற்கை யறிவுடையனாகலின் தூண்டா விளக்கின் சுடரனையாய் என்றார். ௪

மேவும் உன்தன் அடியாருள் விரும்பி யானும் மெய்ம்மையே
காவி சேருங் கயற்கண்ணாள் பங்கா உன்தன் கருணையினால்
பாவி யேற்கும் உண்டாமோ பரமானந்தப் பழங்கடல்சேர்ந்
தாவியாக்கை யானெனதென் றியாதுமின்றி அறுதலே.

உரைநடை :—'காவி சேருங் கயற்கண்ணாள் பங்கா' என்பதை முதலிற் கொள்க.

உரை :—குவளை மலரின் தன்மை பொருந்திய கயல் போன்ற கண்ணையுடைய உமையம்மை பாகனே! உன்னுடைய அடியார் நடுவண் இருக்க விரும்பி யானும் உண்மையையே விரும்புகின்றேன். உன்னுடைய திருவருளினாலே மேலாகிய பேரின்பமாகிய பழைய கடலிற் புகுந்து, உயிர்ப்போதம், உடம்புணர்ச்சி, யானெனதென்னுஞ் செருக்கு முதலிய யாதுமில்லாமற் செயல் அற்றுப் போதலாகிய நிலை பாவி யேனுக்கு மேற்படுமோ?

குறிப்பு :—விரும்பி என்பதை விரும்ப என்பதன் திரிபாகக் கொண்டு அடியார் மெய்ம்மையையே உள்ளத்தில் விரும்ப, அவர்கள் சார்பு பற்றி யானும் மெய் விரும்புவேன் என்றலுமுண்டு. காவி = நீலோற்பல மலர். மேவும் என்பதை அடியாரென்பதோடு முடித்தலும், மெய்ம்மையே என்பதைச் சேர்ந்து என்பதனோடும் முடித்தலுமுண்டு. ௫

அறவே பெற்றார் நின்அன்பர் அந்தமின்றி அகநெகவும்
புறமே கிடந்து புலைநாயேன் புலம்புகின்றேன் உடையானே
பெறவே வேண்டும் மெய்யன்பு பேரா ஒழியாப் பிரிவில்லா
மறவா நினையா அளவிலா மாளா இன்ப மாகடலே.

உரைநடை :—பேரா வொழியா...கடலே என்பதை முதலிற் கொள்க.

உரை :—நிலை பெயராத, என்றும் நிலைத்த, நம்மை விட்டு நீங்காத, மறப்பு நினைப்பில்லாத, அளவற்ற, தொலையாத பேரின்ப சாகரமே! உன்னுடைய மெய்யன்பர்கள் முடிவில்லாமல் உள்ளம் உருகவே உன்னை முழுவதும் பெற்று விட்டார்கள். அவர்கள் கூட்டத்திற்கு வெளியே பயனில்லாமற் கிடந்து கீழ்த் தன்மையுடைய நாயேன் பேரின்பம் வேண்டுமென்று புலம்புகின்றேன். நாதனே! அது பெறுதற்குரிய உண்மை யன்பினை நான் கட்டாயம் பெற வேண்டும்.

குறிப்பு :—அறவு என்பதற்கு நிராசை, ஆசையின்மை எனப் பொருளுரைப்பாருமுளர். கடல் ஏழு ஆதலின் இன்பமா கடலுக்கும் ஏழு அடைமொழி கொடுத்தார். இறைவன் போக்கு வரவில்லாதவனாதலின் 'பெயரா' என்றார். இன்பம் இறைவனை விட்டு நீங்காமையின் 'ஒழியா' என்றார். உயிர்களோடு இறைவன் அத்துவிதமாய்க் கலந்திருத்தலின் 'பிரிவில்லா' என்றார். சகல அவத்தையைக் கடந்த அதீத நிலையில் அனுபவிக்கப் படுவதாதலின் 'மறவா, நினையா' என்றார். வரம்பிலின்பமாகலின் 'அளவிலா' என்றார். பெற்ற பேரின்பம் உயிரைவிட்டு நீங்காமையின் 'மாளா' என்றார். ௬

கடலே அனைய ஆனந்தம் கண்டா ரெல்லாங் கவர்ந்
துண்ண, இடரே பெருக்கி ஏசற்றிங் கிருத்த லழகோ அடி

நாயேன், உடையாய் நீயே அருளுதியென் றுணர்த்தா
தொழிந்தே கழிந்தொழிந்தேன், சுடரார் அருளால் இருள்
நீங்கச் சோதீ இனித்தான் துணியாயே.

உரை:—முதல்வனே! மேலே கூறிய கடல்போன்ற பேரின்பத்தைக் கண்ட அடியார்களெல்லாம் வலிதிற்பெற்று அனுபவிக்கவும், துன்பத்தையே பெருக்கித் துயருற்று அடிமையாகிய நாயேன் இவ்வுலகில் சும்மா விருப்பது அழகாகுமா? என்னை உடைய நாதனாகிய நீயே நான் கேளாமலே அப்பேரின்பத்தைத் தருவாயென் றெண்ணி உனக்கு என் விருப்பத்தைத் தெரிவியாதுபோய்க் கழிவுபட்டுவிட்டேன். ஒளிவண்ணனே! இனியாவது பிரகாசம் பொருந்திய (நினது) அருளாகிய (வாளினாலே) என்னுடைய அறியாமையாகிய இருள் நீங்கும்படி அதனைச் சேதிப்பாயாக.

குறிப்பு:—கடலே என்பதில் ஏகாரம் தேற்றம் உணர்த்தும். சுடர்=ஞானப் பிரகாசம். துணி யென்றமையால் அருள் என்பது வாளாக உவமிக்கப்பட்டது. ௭

துணியா உருகா அருள்பெருகத் தோன்றுந் தொண்ட
ரிடைப்புகுந்து, திணியார் மூங்கிற் சிந்தையேன் சிவனே
நின்று தேய்கின்றேன், அணியா ரடியா ருனக்குள்ள அன்
புந் தாராய் அருளளியத், தணியா தொல்லை வந்தருளித்
தளிர்ப்பொற்பாதந் தாராயே.

உரை:—சிவபெருமானே! நீ ஆதரவென்று துணிவுற்று மனமுருகித் திருவருட் பொலிவுமிகும்படி விளங்குகின்ற அடியார்கள் நடுவே புகுந்திருக்குந் திண்மை பொருந்திய மூங்கிலைப்போல உருகாத மனமுடைய யான் இவ்வுலகில் நிலையுற்றுத் தளர்கின்றேன். அழகு பொருந்திய உனதன்பர் உன்பால் வைத்துள்ள மெய்யன்பையும் எனக்குத் தரவேண்டும். தாமதஞ் செய்யாமல் விரைவில் என்னுள்ளத்தில் அருள் கனியும்படி தோன்றியருளித் தளிர்போன்ற உனது பொன்னடிகளை எனக்குத் தருதல்வேண்டும்.

குறிப்பு:—துணியா=துணிந்து: உறுதியுடன். திணி=திண்மை. மூங்கிலானது மேற் செல்லாது வளைவுற்று நிற்றல்போல, மனமானது கடவுளை நோக்காது உலகினை நோக்கினமை குறிக்கப்பட்டது. அணி=அழகு; நேர்மை. தாராய்=தருக. அருளளியத் தணியாதென்று சேர்த்து, அருள்தானே கனியும் வரை தாமதியாது என்று பொருள் கொள்வதுமுண்டு. ௮

தாரா அருளொன் றின்றியே தந்தாய் என்றுன் தமரெல்லாம்
ஆரா நின்றார் அடியேனும் அயலார் போல அயர்வேனோ
சீரார் அருளாற் சிந்தனையைத் திருத்தி ஆண்ட சிவலோகா
பேரா னந்தம் பேராமை வைக்கவேண்டும் பெருமானே.

உரைநடை:—'சீரார் அருளாற் சிவலோகா' வென்பதை முதலிற் கொள்க.

உரை:—சிறப்புப் பொருந்திய உனது திருவருளினால் எனது உள்ளத்தைச் செம்மை செய்து ஆட்கொண்ட சிவலோகநாதனே! உன் உறவினர்களாகிய அடியாரெல்லாம் நீ அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய அருள் ஒன்றும் பாக்கியில்லாமற் கொடுத்தா யென்பதைத் தெரிந்து உன் பேரானந்தத்தை முழுதுந் துய்க்கின்றார்கள். அடியேன் மாத்திரம் உன்னருளுக்கு அயலானவர்கள் போலத் தளர்வேனோ? பேரின்ப நுகர்ச்சியானது எப்போதும் நீங்காதபடி பெருமானே! எனக் கமைத்தருள வேண்டும்.

குறிப்பு:—அயலார்=அருளுக்குப் புறம்பானவர்கள். ஆராநின்றார்=உண்ணா நின்றார் = அநுபவிக்கின்றார். அயர்வேன்=தளர்வேன். பேராமை=பெயருதலில்லாமை. ௯

மானேர் பங்கா வந்திப்பார் மதுரக் கனியே மனம்நெகா
நானேர் தோளாச் சுரையொத்தால் நம்பிஇத்தால் வாழ்ந்தாயே
ஊனே புகுந்தஉனையுணர்ந்தே உருகிப்பெருகும்உள்ளத்தைக்
கோனே அருளுங் காலந்தான்கொடியேற்கென்றோகூடுவதே.

உரை:—மானைப்போன்ற பார்வையுடைய உமையம்மைபாகனே! வணங்குவார்க்கு இனிய கனிபோல்பவனே! மனம் நெகிழாத நான் தொளைக்கப்படாத பயனற்ற ஒரு சுரைக்குடுக்கை போன்றிருந்தால், அண்ணலே! நீயிதனால் நன்கு வாழ்ந்து விட்டாய் போலும்! உடம்பினை இடமாகக்கொண்ட உன்[illegible] அன்பினாலுருகி அறிவு

187096

பெருகுதற்குரிய மனதைத் தலைவனே! நீ கொடுத்தருளுங் காலந் தான், கொடுமை யேனுக்கு எந்நாள் வந்து சேருமோ?

குறிப்பு;—தோளாச்சுரை, நீர்ப்பாத்திர முதலிய எவ்வகையான கருவியாகவும் பயன்படாதது. அதுபோல மனம் நெகிழ்ந்து அருள் தங்குதவற்குப் பயன்படாத இடத்து, அது தோளாச்சுரை போல்வ தென்றார். பயன்படாத அடியவர் வாயிலாக இறைவன் பெருமை விளங்காமையின், 'நம்பியித்தால் வாழ்ந்தாயே' என்றார். 'ஊனே புகுந்த' என்பதற்கு மனித வடிவமெடுத்துவந்த என்று முரைப்பர்.

கூடிக் கூடிஉன்னடியார் குனிப்பார் சிரிப்பார் களிப்பாரா
வாடி வாடி வழியற்றேன் வற்றல் மரம்போல் நிற்பேனோ
ஊடி ஊடி உடையாயொடு கலந்துள் ளுருகிப் பெருகிநெக்
காடி ஆடி ஆனந்தம் அதுவே யாக அருள்கலந்தே.

உரை:—உன்னுடைய தொண்டர்கள் தம்முன் இடை விடாது சேர்ந்து சேர்ந்து கூத்தாடி நகைத்து, இறுமாப்புக் கொள்வாரா யிருப்பவும், ஓயாது வாட்டமடைந்து உன்னை யடையும் வழியற்றுப் போனயான், உலர்ந்து போகின்ற மரம்போலப்பயனற்று நிற்பேனோ? என்னை யடிமை கொண்டவனாகிய உன்னோடு சேர்ந்து சேர்ந்து பிணங்கிப் பிணங்கி உள்ளமுருகி, அன்பு பெருகி, மனம் நெகிழ்ந்து, இடைவிடாது ஆனந்தக் கூத்தாடி, இன்பமயமேயாகும்படி நீ அருள் செய்வாயாக.

குறிப்பு :— குனிப்பார், சிரிப்பார் என்பவற்றை முற்றெச்ச மாகக் கொள்க. கலந்தே என்பதைக் கலந்து என்பதனோடு இசைத்து மீட்டும் மீட்டும் கலந்தும் ஊடியும் எனப்பொருள் கொள்க. அன்பினால் கலத்தலும் குறைகண்ட விடத்து ஊடுதலும் நிகழ்வன. குறை நீங்கவே மீட்டும் கலத்தலுண்டாம். கலத்தலும், ஊடுதலும் காதலை மிகுதிப்படுத்து மாதலின், அவற்றை வேண்டினர். உள்ளுருகுதல் தற்போதங் கழல்வதற் கிடமாகும். மனம் நெகிழ்ந்த இடத்தே அந்தக் கரணங்கள் ஓய்வடையும். ஆனந்தக் கூத்து, பேரின்பத்தின் மெய்ப்பாடு. கக

திருச்சிற்றம்பலம்

திருப்பெருந்துறையில் அருளிய

குழைத்த பத்து

ஆத்தும நிவேதனம்

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

குழைத்தாற் பண்டைக் கொடுவினைநோய் காவாய் உடை யாய் கொடுவினையேன், உழைத்தா லுறுதி யுண்டோதான் உமையாள் கணவா எனைஆள்வாய், பிழைத்தாற் பொறுக்க வேண்டாவோ பிறைசேர் சடையாய் முறையோவென், றழைத்தால் அருளா தொழிவதே அம்மா னேஉன் அடி யேற்கே.

உரைநடை :—கொடுவினை நோய் குழைத்தால் உடையாய் என மாறுக. உன்னடி யேற்கே என்பதை அருளாது என்பதற்கு முன்னமைக்க.

உரை :—பழைய தீவினையாகிய வியாதி என்னை வாட்டினால் என்னை உடையவனே! நீ காப்பாற்றுவாயாக. தீவினை யுடையேன் முயற்சி செய்தால் உறுதியான பயன் ஏற்படுமோ? உமையம்மையின் மணவாளனே! என்னை யாண்டருள்வாய். நான் பிழை செய்தால் நீ மன்னித்து அருளவேண்டாமா? இளமதி சூடிய சடையையுடைய வனே! ஓலமிட்டழைத்தால் தந்தையே! உன்னடியானாகிய எனக்கு அருள் செய்யாது போவது தகுதியோ?

குறிப்பு :—முறையோ வென்பதை ஒழிவதே என்பதோடு சேர்த்துத் தகுதியோ வென்று பொருளுரைப்பின் சடையாய் என் றழைத்தால் என முடித்தல் வேண்டும். ஓலமிட் டழைப்பதை முறையோ வென்றழைப்பதாகவுங் கூறுவர். அம்மானே = தந்தையே! அழகிய பெரியோனே! எனவுங் கூறுவர். க

அடியேன் அல்லல் எல்லாம் முன்அகல ஆண்டாய்என்
றிருந்தேன், கொடியே ரிடையாள் கூறுஎங் கோவே ஆவா
என்றருளிச், செடிசேர் உடலைச் சிதையாத தெத்துக்
கெங்கள் சிவலோகா, உடையாய் கூவிப் பணிகொள்ளா
தொறுத்தால் ஒன்றும் போதுமே.

உரைநடை :—கொடியே ரிடையாள் கூறுவெங் கோவே என்பதை முதலிற் கொள்க.

உரை:—கொடிபோன்ற அழகிய இடையையுடைய உமையம்மை பாகனே! எமது தலைவனே! அடியேனுடைய துன்பமெல்லாம் முன்னமே நீங்கும்படியாக நீ யாட்கொண்டா யென்று எண்ணி யிருந்தேன். ஐயோ வென் றிரக்கங்கொண்டு தீவினை சேருதற்கிடமாகிய உடலை அழித்து ஒழியாதது எதற்காக? எங்கள் சிவலோக நாயகனே! எங்களை உடையவனே! எங்களை யழைத்து ஏவல்கொள்ளாது தண்டிப்பதொன்றுமே போதுமா?

குறிப்பு :—முன் என்றது திருப்பெருந்துறையில் அடிகள் ஆட்கொண்ட காலத்தே. செடி=பாவம்; தீவினை. ஒறுத்தால்= தண்டித்தால். உடம்பில் தம்மை வைத்திருப்பதே தண்டனை யென்பது அடிகள் கருத்து. ௨

ஒன்றும் போதா நாயேனை உய்யக் கொண்ட நின்
கருணை, இன்றே இன்றிப் போய்த்தோதான் ஏழை பங்கா
எங்கோவே, குன்றே அனைய குற்றங்கள் குணமா மென்றே
நீகொண்டால், என்தான் கெட்ட திரங்கிடாய் எண்தோள்
முக்கண் எம்மானே.

உரைநடை :—ஏழைபங்கா எங்கோவே, எண் தோள் முக்கணெம்மானே என்பதை முதலிற் கொள்க.

உரை:—உமையொரு பாகனே! எம்மிறைவனே! எட்டுத் தோள்களும், மூன்று கண்களுமுடைய தந்தையே! ஒன்றுக்கும் பற்றாத நாயேனாகிய என்னைப் பிழைக்கும்படி யாட்கொண்ட உன்னுடைய கருணையானது இப்போது இல்லாமற் போயிற்றோ? மலைபோன்ற

குற்றங்களைக் குணங்களென்றே நீ ஏற்றுக்கொள்வாயானால் என்ன தான் கெட்டுப்போயிற்று? அதனால் என் குற்றங்களைப் பொறுத்து இரங்கியருள்க.

குறிப்பு:—எண் குணங்களை, எண் தோள்களாகக் கூறுவதுண்டு. அன்பர் செய்த மலைபோன்ற குற்றங்களைக் குணமென்று இறைவனேற்றுக்கொள்வா னென்ற குறிப்புக் காண்க. போய்த்தோ வென்பது போயிற்றோ என்பதன் மருவு. ஏழை=பெண். ௩

மானேர் நோக்கி மணவாளா மன்னே நின்சீர் மறப்பித்திவ்
வூனே புகஎன் தனைநூக்கி உழலப் பண்ணு வித்திட்டாய்
ஆனால் அடியேன் அறியாமை அறிந்து நீயே அருள்செய்து
கோனே கூவிக் கொள்ளுநாள் என்றென் றுன்னைக்கூறுவதே.

உரை :—மான் பார்வை போன்ற திருநோக்குடைய உமையாள் கணவனே! அரசே! உன்னுடைய புகழை மறக்கும்படி செய்து, இவ்வுடம்பிலே புகுந்து தங்குமாறு என்னை யதன்கண் தள்ளி, என்னை யலையும்படி செய்துவிட்டாய். அது அப்படியாயினும், அடியேனது அறிவில்லாமையைத் தலைவனே! நீயே தெரிந்து அருள்புரிந்து உன்பா லென்னை யழைத்துக்கொள்ளும் நாள் எப்போது எப்போது என்று உன்பால் முறையிடுவதே எனக்குத் தொழிலாய் விதித்தாய் போலும்.

குறிப்பு :—நூக்கி=தள்ளி. கூறுவது=முறையிடுவது கேட்பது எனவும் பொருள்கொள்ளலாம். கூறுவதே என் தொழில். நீ பயனளிக்கமாட்டாய்போலு மென்று இறைவனை நோக்கிக் கூறுங் குறிப்புக் காண்க. ௪

கூறும் நாவே முதலாகக் கூறுங் கரணம் எல்லாம்நீ
தேறும் வகைநீ திகைப்பும்நீ தீமை நன்மைமுழுதும்நீ [க்கில்
வேறோர் பரிசிங் கொன்றில்லை மெய்ம்மை உன்னை விரித்துரை
தேறும் வகைஎன் சிவலோகா திகைத்தால் தேற்றவேண்டாவோ.

உரைநடை :—சிவலோகா வென்பதை முதலிற் கொள்க.

உரை :—சிவலோக நாதனே! உண்மையாக உன் தன்மையை விரித்துப் பேசில் சொல்லுதற்குக் கருவியாகிய நாக்கு முதலாகப் பேசப்படுங் கருவிகளெல்லாம் நீயே, திகைப்பதற்குக் காரணமும்

நீயே, தெளிவடையும் வழியும் நீயே, நன்மை தீமை முழுவதும் நீயே,உனக்கு வேருக யாதொரு தன்மையுமில்லை. நான் தெளிவடையும் வகையாது? நான் திகைப்படைந்தால் நீ என்னைத் தெளிவிக்க வேண்டாமா?

குறிப்பு :—எல்லாவற்றையு மியக்குபவனும், எல்லாம் நிகழ்வதற்குக் காரணமானவனுங் கடவு ளாதலானும் அவன் எல்லாவற்ருேடும் அத்துவிதமாய்க் கலந்திருத்தலாலும், நா முதலிய யாவும் அவனே என்ருர். தேறுதல்=தெளிதல். வீடுகிடைக்குமோ வென்ற தமது திகைப்பை இறைவன் மாற்றவேண்டு மென்பது குறிப்பு. ரு

வேண்டத் தக்க தறிவோய்நீ வேண்ட முழுதுந் தரு
வோய்நீ, வேண்டும் அயன்மாற் கரியோய்நீ வேண்டி என்
னைப் பணிகொண்டாய், வேண்டி நீயா தருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டின் அல்லால், வேண்டும் பரிசொன்
றுண்டென்னில் அதுவும் உன்தன் விருப்பன்றே.

உரை :—யான் விரும்பத் தக்கனவற்றை யறிபவன் நீயே. அவற்றை உன்பாலிரந்து கேட்க முழுவதையுந் தருபவனும் நீயே. உன்னைக் காணவிரும்பிய பிரமனுக்குந் திருமாலுக்கும் காணுதற் கரியவனுனவனும் நீயே. என்னை நீயேவிரும்பிவந் தாட்கொண்டாய், நீ எதனைவிரும்பி யருள் செய்தாயோ யானு மதனையே விரும்புவதல்லாமல் இன்னும் நான் விரும்பக் கூடியது யாதாகிலு மிருக்குமாயின் அதுவும் உன்னுடைய விருப்பத்தின்படி நிகழ்வ தல்லவா?

குறிப்பு :—இதனுள் இறையருள் வசப்பட்டு நிற்குந் தமது நிலையை அடிகளறிவுறுத்தினர். பணி=ஏவல். பரிசு=வகை; செயல்.

அன்றே என்தன் ஆவியும் உடலும் உடைமை எல்லா
முங், குன்றே அனையாய் என்னைஆட் கொண்ட போதே
கொண்டிலையோ, இன்ருேர் இடையூ றெனக்குண்டோ எண்
தோள் முக்கண் எம்மானே, நன்றே செய்வாய் பிழைசெய்
வாய் நானே இதற்கு நாயகமே.

உரைநடை :—'எண்தோள் முக்கண் எம்மானே' என்பதை முதலிற் கொள்க.

உரை :— எண்தோளும் முக்கண்ணு முடைய எமது பெரியோனே! என்னை யாட்கொண்ட அக்காலத்திலேயே என் உடல், பொருள், ஆவி எல்லாவற்றையும் மலை போல்வாயாகிய நீ ஏற்றுக் கொள்ளவில்லையா? இப்போது எனக்கு இடையூறு ஏதாவதுண்டா? தக்கது செய்வாயாயினும், தவறு செய்வாயாயினும் செய்க. நானிதற்குத் தலைவனு? (உன்விருப்ப மல்லவா?)

குறிப்பு :—அன்றே என்பதை ஆட்கொண்டபோதே என்பதனேடுமுடிக்க. குருவுக்கு உடல், பொருள், ஆவி மூன்றையுங்கொடுத்தல் மரபு. பாதுகாப்புக்குச் சிறந்த அரணை மலைபோல நீயிருக்கும் பொழுது எனக்கு எப்படி இடையூறு வரும் என்ற குறிப்பைக் காண்க. உடைமை=பொருள். தனக்கு யாதொரு அதிகாரமுமில்லை. நன்மையுந் தீமையுங் கடவுளைப் பொறுத்தது என்று குறிப்பித்தார். எ

நாயிற் கடையாம் நாயேனை நயந்து நீயே ஆட்கொண்டாய்
மாயப் பிறவி உன்வசமே வைத்திட் டிருக்கும் அதுவன்றி
ஆயக் கடவேன் நானேதான் என்ன தோஇங் கதிகாரங்
காயத்திடுவாய்உன்னுடைய கழற்கீழ்வைப்பாய்கண்ணுதலே.

உரை :—நாயினுங் கீழ்ப்பட்ட நாய்த்தன்மை யுடைய என்னை நீயே விரும்பிவந்து ஆண்டருளினை. கபடமிக்க என் பிறவியை உன் வசமே ஒப்புவித்துவிட்டுச் சும்மாயிருக்குந் தன்மை யன்றி அதனைப் பற்றி ஆராய உரிமை யுடையேனே? அதைப்பற்றிய அதிகாரம் என்னுடையதோ? (அது உன்னுடையதே யாதலால்) நெற்றிக் கண்ணை யுடைய பெருமானே! உடம்பி லிடுவையோ? உன் திருவடியின் கீழ் வைப்பையோ? (எதுவும் உன்கட்டளைப்படி நிகழ்வதே.)

குறிப்பு :—நாயின் கெடுதற்றன்மை யிருப்பினும் அதன் நற்றன்மை யில்லாமையினல் நாயிற்கடையாம் நாயேனை என்ருர். மாயம்=தந்திரம். என்ன பிறவி வருமென்று எதிர்பார்க்க முடியாமையால் அவ்வாறு கூறினர். அ

கண்ணார் நுதலோய் கழலிணைகள் கண்டேன் கண்கள் களிகூர
எண்ணுதிரவும் பகலும்நான் அவையேஎண்ணும் அதுவல்லால்

மண்மேல் யாக்கை விடுமாறும் வந்துன் கழற்கேபுகுமாறும்
அண்ணு எண்ணக் கடவேனே அடிமைசால அழகுடைத்தே.

உரை :—கண்பொருந்திய நெற்றியை யுடையவனே ! உன்னுடைய திருவடிகளிரண்டையும் என் கண்குளிரக் காணப்பெற்றேன். அவற்றையே இரவும் பகலுமாய் எப்போதும் நான் நினைப்பு மறப்பில்லாது எண்ணிக்கொண் டிருப்ப தல்லாமல் மண்ணுலகத்திலே இவ்வுடம்பு நீங்கும் வகையையும் அதனைவிட்டு உன் திருவடிக்கே போய்ச் சேரும் வகையையும் அப்பனே! நான்நினைக்க உரிமையுடையேனே? அப்படி எண்ணினால் எனதடிமைத்தன்மை மிகவும் பொருத்தமுடைத்தாகுமோ?

குறிப்பு :—எண்ணுது எண்ணுவது=சுட்டியறியாம லறிவது. அண்ணு=மேலோனே. மிகவும் அழகுடைத்தே என்று இகழ்ச்சி பற்றிக் கூறினு ரென்றலு முண்டு. ௯

அழகே புரிந்திட் டடிநாயேன் அரற்றுகின்றேன்உடையானே
திகழா நின்ற திருமேனி காட்டி என்னைப் பணிகொண்டாய்
புகழே பெரிய பதம்எனக்குப் புராண நீதந் தருளாதே [யே.
குழகா கோல மறையோனே கோனே என்னைக் குழைத்தா

உரை :—அழகனே! நாயேன் உன் திருவடியைப் பெற விரும்பி யலறுகின்றேன். என்னை உடையவனே! ஒளி விளங்குகின்ற உனது திருமேனியைக் காட்டி என்னை எவல் கொண்டாய். புகழ்வடி வானவனே! பெரிய பேரின்பநிலையை நீ கொடுத்தருளாமல், இளமை வடிவனே! அழகிய வேதியனே! தலைவனே! என்னை நீ வாட்டினையே.

குறிப்பு :—அழகு என்பதை, குழைத்தாயே என்பதனேடு முடித்து இதழகோ என்று பொருளுரைத்தலு முண்டு. ௧௦

திருச்சிற்றம்பலம்

பேதமே செய்வாய் அபேதமே செய்திடுவாய்
பேதாபே தஞ்செய்வாய் பின்.

(உரை) யாதொரு காரணத்தினுற் சர்வ லோகங்களிலுமுள்ள எல்லாப் பொருள்களுஞ் சத்தியைப் பொருந்தின சிவனுடைய அடையாளமே யாகையால், நீயும் இதனைப் பேதமென்பாய் பேதாபேதமென்பாய் இவற்றிற் பொருந்தின தொன்றைச் சொல்வாயாக. பின் என்றது ஞாதாக்களுக்கு இந்த மூன்று காரியங்களுங் கருத்தல்ல வென்றது. அடையாளமென்றது சர்வமுஞ் சைதன்னியமாக நின்றவர்கட்கன்றி நின்றிரக்ஷிக்கையாலெனஅறிக. ௮௨

இந்த முறைமை அர்த்தத்தில் அழுந்தினவனுக் கொழிந்து கேட்டவனுக்கு விளங்காதென்று, இன்னமும் இதனை விளங்க அருளிச்செய்கின்றார் :

நின்றபடி நின்றவர்கட் கன்றி நிறந்தெரியா
மன்றினுள்நின் ருடல் மகிழ்ந்தானும்—சென்றுடனே
எண்ணுறும்ஐம் பூதமுதல் எட்டுருவாய் நின்ருனும்
பெண்ணுறநின் ருடும் பிரான்.

(உரை) நீ சொல்லுகின்ற பேதமும் அபேதமும் பேதாபேதமும் அன்று. சங்கார காலத்திலே, சத்தியையும் ஒடுக்கிக்கொண்டு சங்கார தாண்டவஞ் செய்தருளின தம்பிரானே, சிருஷ்டி காலத்திலே, தோற்றுவிக்கத்தக்க பொருள்களுடனே பொருந்திய பஞ்சபூதங்களுஞ் சந்திராதித்தரும் ஆன்மாக்களுமாய் நின்ருனும், திதி காலத்திலே, அடியார் பிறவித் துயரங்கெடத் திருவம்பலத்தில் ஆநந்த நிருத்தத்தை விரும்பினனுமாகையால், அநாதியே தன்னுடைய சொரூபந் தோன்ருமல் ஆன்மாவாய் நின்ற முறைமைபோல, ஆன்மபோதந் தோன்ருதபடி சிவனையே நின்றவர்களுக் கொழிந்து, சிவனுடைய உண்மை தெரியாது. ௮௩

இனிச் சொரூபத்திலே, ஒரு தன்மையாய் நிற்கும் முறைமையை அருளிச் செய்கின்றார் :

சிவமே சிவமாக யான்நினைந்தாற் போலச்
சிவமாகி யேயிருப்ப தன்றிச்—சிவமென்(று)

உணர்வாரும் அங்கே உணர்வழியச் சென்று
புணர்வாரு முண்டோ புவி.

(உரை) சிவமே சிவமாக யான் நினைந்தாற் போலச் சிவமாகியே இருப்பதன்றி-பேதமும் அபேதமும் பேதாபேதமும் அறப் பக்குவத்திற் பிரகாசித்த சிவசொரூபமே சொரூபமாக வேறொரு விகற்பமுங் கூடாமல் நான் அநுபவித்தபடியே உன்னையும் நிறுத்த நினைந்தாற் போல, மாணவகனே! நீயும் ஒரு விகற்பமுங்கூடாமல் அந்தச் சொரூபமே சொரூபமாக இருப்பதொழிந்து,—சிவமென்று உணர்வாரும் அங்கே உணர்வு அழியச்சென்று புணர்வாரும் உண்டோ புவி-தானும் தனியே ஒரு முதலென்றும், சிவனும் தனித்தொரு முதலென்றும் தன்னுடைய போதத்தாலே இந்தச் சிவனை அறிய விசாரிப்பாரும், அவ்விடத்தேதான் கெட்டுச்சிவத்துடனே பொருந்த விசாரிப்பாரும் உண்டோ உலகங்களில். ௮௪

இன்னமும் இதனை விளங்க அருளிச் செய்கின்றார் :

அதுவிது வென்றும் அவனானே யென்றும்
அதுநீயே யாகின்றா யென்றும்—அதுவானேன்
என்றும் தமையுணர்ந்தார் எல்லாம் இரண்டாக
ஒன்றாகச் சொல்வரோ உற்று.

(உரை) ஆன்மாவும் சிவமும் எப்பொழுதும் இரண்டாயிருக்குமென்றும், சிவமென்று ஒரு முதலில்லை ஆன்மா தானே சிவமென்றும், சிவம் நீ யன்றி வேறில்லை உன்னுடைய உபாதிகள் நீங்கினபொழுதே நீதானே சிவமாகின்றா யென்றும், நான் சிவனுடனே கூடிச் சிவனாய் விட்டேனென்றும், தம்மையுள்ளபடி அறிந்திருக்கின்ற சிவயோகிகள் இப்படியே பேதமாகவும் அபேதமாகவும் பேதாபேதமாகவும் சொல்லுவார்களோ மாணவகனே! ௮௫

இனிக்கர்த்தா எல்லாமாய் நிற்கின்ற சுபாவத்தை விளங்க அருளிச் செய்கின்றார் :

ஈறாகி அங்கே முதலொன்றாய் ஈங்கிரண்டாய்
மாறாத எண்வகையாய் மற்றிவற்றின்—வேறாய்

உடனாய் இருக்கும் உருவுடைமை யென்றுங்
கடனா யிருக்கின்றான் காண்.

(உரை) ஈறாகி அங்கே முதல் ஒன்றாய் - சர்வமுமுடிந்த விடத்தே, சிவம் ஒன்றுமேயாய்,—ஈங்கு இரண்டாய் - மீண்டுஞ் சிருஷ்டி காலத்திலே, சத்தியைத் தோற்றுவித்தும் அந்தச் சத்தியுந் தாமுமாய்,—மாறாத எண்வகையாய் - சர்வத்தையும் அந்தச் சத்தியிடமாய் நின்றுந் தோற்றுவித்து அந்தச் சத்தியும் இவையுங் கூடி நின்று நடக்கும்படி ஒழிவற்ற அட்டமூர்த்தியுமாய்,—மற்று இவற்றின் வேறாய் - இப்படி இவற்றிற் பொருந்தி நிற்கும்போதும் இவற்றுக்குத் தான் வேறுமாய்,—உடனாய் இருக்கும் உருவுடைமை - இப்படி வேறாய் நிற்கும்போதும் ஒருமுதல் போல இவைதானேயாய் நிற்கின்ற உண்மையை,—என்றும் கடனாய் இருக்கின்றான் காண் - மாணவகனே! எப்பொழுதும் அவன் உடையனா யிருக்கின்றான் காண்.

இது பேதமென்பார்க்கும் அபேத மென்பார்க்கும் பேதாபேத மென்பார்க்கும் இவை யல்லவென்பார்க்கும் பொருந்தி நிற்பனென்னு முறைமை அறிவித்தது. ௮௬

சிவனுக்குச் சர்வமுந் திருமேனியாகில், உடல் உறுவதெல்லாம் உயிர் உறாதோ வென்ற மாணாக்கனை நோக்கி அருளிச்செய்கின்றார்:

உன்னுதரத் தேகிடந்த கீடம் உறுவதெல்லாம்
உன்னுடைய தென்னாய்நீ உற்றனையோ—மன்னுயிர்கள்
அவ்வகையே காணிங் கழிவதுவும் ஆதுவும்
செய்வகையே நின்றசிவன் பால்.

(உரை) மாணவகனே! உன்னுடைய உதரத்திலே, நானாவிதமாய்க் கிடக்கின்ற ஜந்துக்கள் வினைக்கீடாகப் படுகின்ற சுகதுக்க வாதனைகளெல்லாம், உனக்குள்ள வினைபோல நீ கூடிநின்று அநுபவித்ததுண்டோ? ஆகையால், சர்வத்தையுங் கூடி நிற்கும்போதேயும் அவை ஒன்றுடனும் பற்றற நின்று பிரகாசிக்கின்ற சிவனிடத்திலே, அவனருளாலே நிலைபெற்று நிற்கின்ற ஆன்மாக்கள், ஆகையும் அழிகையுமாய் வருகின்ற உண்மை, அந்த முறைமைபோலக் காண்.

இது சுகதுக்க வாதனைகள் ஆன்மாவுக்கொழிந்து சிவனுக்கில்லை யென்னும் முறைமை அறிவித்தது. ௮௭

சிவன் சுகதுக்க வாதனைகள் கூடாமல் நிற்கும்போதே சர்வமுந் தானாக நிற்கின்ற சாமர்த்தியம் அருளிச் செய்கின்றார் :

அவனே அவனி முதலாயி னானும்
அவனே அறிவாய்நின் றானும்—அவனேகாண்
ஆணாகிப் பெண்ணாய் அலியாகி நின்றானும்
காணாமை நின்றானுங் கண்டு.

(உரை) மாணவகனே ! பிருதிவிமுதல் நாதமீறான தத்துவங்கள் சேட்டிக்கும்படி அந்தத் தத்துவங்களுக்குத் தத்துவனாய் நின்றானும் அந்தப் பரமேசுரனே, இந்தத் தத்துவங்களைப் பொருந்தி ஆன்மாக்கள் கன்ம மலத்தைப் புசிக்கும்படி அந்த ஆன்மாக்களுக்கு ஆன்மாவாய் நின்றானும் அந்தப் பரமேசுரனே. தோற்றப்பட்ட பூத காரியங்கள் ஆன்மாக்கள் செய்த வினைக்கீடாக ஆண் பெண் அலி என்று வகுப்புண்டு வடிவாம்படி அவற்றை வகுப்பித்து இந்த வகுப்புக்கு வகுப்பாய் நின்றானும் அந்தப் பரமேசுரனே. இவற்றை இப்படி அறிந்துகூடி இவை தானாய் நின்று நடத்தும்போதேயும் இந்த முறைமைகள் ஒன்றும் அறியாதபடி திரோபவித்து ஒரு பணியற நின்றானும் அந்தப் பரமேசுரனே. ௮௮

இப்படிப்பட்ட பரமேசுவரனை இந்தத் திருஷ்டியாலே காணவொண்ணாதோ வென்று அன்பு மிகுதியாலே கேட்ட மாணாக்கனை நோக்கி அருளிச் செய்கின்றார் :

இன்றுதான் நீயென்னைக் கண்டிருந்துங் கண்டாயோ
அன்றுதான் நானுன்னைக் கண்டேனோ—என்றால்
அருமாயை ஈன்றவள்தன் பங்கனையார் காண்பார்
பெருமாயைச் சூழல் பிழைத்து.

(உரை) இப்பொழுது நீ என்னைக் கண்டும் இவையெல்லாம் அறியும்போதும் என்னுடைய சொரூபத்தை உன்னுடைய மாமிச திருஷ்டியாலே கண்டாயோ, அன்றி இவற்றை யெல்லாம் அறிந்தறிவிக்கின்ற நான்தான் உன்னுடைய சொரூபத்தை இந்தத் திருஷ்டியாலே கண்டேனோவென்றால், யாவர்க்குந் தெரியாத மாயையைப் பெற்ற சத்தியைப் பாதியிலே யுடைய பரமேசுரனை மாமிச திருஷ்டியாலே காணவல்லார் யாவர் ; விடப்படாத மாயையாலே மறைக்கத் தக்க மறைப்பை யெல்லாந் தப்பி.

இது இந்தத் திருஷ்டிக்குக் கோசரமாகக் கண்டு வழிபட்டு வீடு பெறுதற்கு நம்மைப்போல் எழுந்தருளி வந்து அநுக்கிரகித்த ஆசாரிய மூர்த்தியை யொழிந்து, வேறொரு தெய்வம் இல்லையென்று அறிவித்தது. ௮௯

இப்படிக் கடாக்ஷித்த ஞானகுருவின் பெருமையை அருளிச் செய்கின்றார் :

கடல்அலைத்தே ஆடுதற்குக் கைவந்து நின்றுங்
கடலளக்க வாராதாற் போலப்——படியில்
அருத்திசெய்த அன்பரைவந் தாண்டதுவும் எல்லாம்
கருத்துக்குச் சேயனாய்க் காண்.

(உரை) மாணவகனே ! கடலின்கண்ணெய்தித் திரைகளை அலைத்து நின்றாடுதற்கு வல்ல சாமர்த்தியவான்களுக்கும், கடலினுடைய ஆழமும் அகலமும் நீளமும் அறியவாராததுபோல, பூமியின்கண்ணே சரியை கிரியை யோகங்களிலே தீரவநுட்டித்த பத்திமான்களுக்கும், சிவனுடைய ரூப சொரூப சுபாவங்களை அறிய விசாரிக்கில், அவர்கள் கருத்துக்கும் எட்டாதாகையாலே, நம்மைப்போலத் தம்பிரானார் திருமேனிகொண் டெழுந்தருளி வந்து ஞான தீக்ஷாக்கிரமங்களினாலே மலங்களைப் போக்கி அவர்களை அடிமைகொண்டது.

ஆகையால், நம் பொருட்டுத் திருமேனி கொண்டெழுந்தருளி வந்த ஆசாரியனே அருளுஞ் சிவமுமென்று அருளிச் செய்கின்றார் :

சிவனெனவே தேறினன்யான் என்றமையால் இன்றும்
சிவன்அவனி வந்தபடி செப்பில்—அவனிதனில்
உப்பெனவே கூர்மை உருச்செய்யக் கண்டமையால்
அப்படியே கண்டாய் அவன்.

(உரை) "சிவனெனயானுந் தேறினன் காண்க" என்று திருவாதவூரர் அருளிச்செய்த பிரமாணப்படி, நம்மை இரக்ஷிக்குங் காரணத்தால் இப்பொழுதும் பரமேசுவரன் நம்மைப்போல எழுந்தருளிவந்த முறைமை சொல்லில், உலகில் உவரிநீர் இரதமான கூர்மை உப்பாகவே வடிவங் கொண்டதைக் காண்கையால் அப்படியே காண் மாணவகனே! அருளாலே சிவன் திருமேனி கொண்ட முறைமை. ௯௧

இன்னமும் இவன் சந்தேகந் தீராதது கண்டு, ஆசாரியன் ஆன்மாக்களில் ஒருவன் அல்லனானபடியைத் திருட்டாந்த பூர்வமாக அருளிச்செய்கின்றார் :

அவனிவனாய் நின்ற(து) அவனருளால் அல்ல(து)
எவனவனாய் நிற்கின்ற தேழாய்—அவனிதனில்
தோன்றுமரப் புல்லூரி தொல்லுலகில் அம்மரமாய்
ஈன்றிடுமோ சொல்லாய் இது.

(உரை) வாக்குமனாதீத கோசரமாயுள்ள சர்வேசுவரன் ஆன்மாக்களைப்போலத் தேகியாய்த் தோன்றினது, சகலரிற் பக்குவரான ஆன்மாக்களுக்கு அவர்களுடைய சத்திநிபாதத்துக்கீடான சம்ஸ்காரங்களாலே அவர்களுடைய மல மாயை கன்மங்களைப் போக்கித் தனக்குடைமையான பரமாநந்தத்தை அளிக்கைக்குத் தன்னுடைய அருளாலே திருமேனிகொண் டெழுந்தருளிவந்த தொழிந்து, எப்படிப்பட்டவன் எப்படியாய் நிற்பானென்றுசொன்னாய் அறிவில்லாதவனே ; அஃதென்போல வென்னில், பூமியின்கண்ணே தோன்றின மரமானது, பயன்படுங் காலங்களிலே கைம்மாறு கருதாமல் சிரத்தையுள்ளவர்களுக்குப் பலன்களைக் கொடுத்துச் சந்துஷ்டி பிறப்பியாநிற்கும் ; இஃதொழிந்து, இந்த மரந்தாரகமாய் நிற்கின்ற புல்லூரி, மரத்தின் பலத்தைக் கொடுக்கவற்றோ மாணவகனே ! இதனைச் சொல்லாய்.

இது திருமேனி கொண்டெழுந்தருளி வந்த ஆசாரியனைச் சிவன்றானென்றே தெளிய அறிவித்தது. கஉ

அருளென்ப தொன்று வேண்டுமோ சிவமொன்றுமே அமையாதோ வென்ற மாணாக்கனை நோக்கி, அந்தச் சிவமும் அருளாலொழிந்து மோக்ஷத்தைக் கொடுக்க மாட்டாதென்று அந்த அருளின் பெருமையை அருளிச் செய்கின்றார் :

முத்தி முதற்கொடிக்கே மோகக் கொடிபடர்ந்(து)
அத்தி பழுத்த தருளென்னுங்—கத்தியினால்
மோகக் கொடியறுக்க முத்திப் பழம்பழுக்கும்
ஏகக் கொடியெழுங்காண் இன்று.

(உரை) முத்தியைப் பெறுவதற்கு முதலான ஆன்மாவென்பதொரு கொடியிலே, அநாதியே மறைக்கத்தக்க ஆணவ மலத்தின்

காரியமான அஞ்ஞானமான கொடி வெகுவிதமாகப் படர்ந்து, இதனாலே இதாகிதங்கள் விளைந்து, இது காரணமாக மயக்கத்தைச் செய்கின்ற மாயையாலே பூதகாரியமான உடம்பு ஜநநந்தோறும் பலியாநிற்கும். இவை பக்குவப்பட்ட எல்லைகளை யறிந்து, தம்பிரானுந் திருமேனி கொண்டெழுந்தருளி வந்து, அருளாலே சமைந்த அநேக தாரைப்பட்ட வாளாலே இந்த ஆணவமல மூலத்தின் வேரறுக்க, அப்பொழுது எல்லா மலங்களின் முதலடங்கலுஞ் சோர்ந்து போய், முத்தியானது வெகு பலமாகப் பலியாநிற்கும். இந்தப் பழக்கத்தினுடைய இரசத்தினாலே சிவமென்றும் ஆன்மாவென்றும் இரண்டல்லாதபடி அப்பொழுதே ஒரு நீர்மையான சுபாவந் தோன்றாநிற்கும். கங

இனி இந்த வர்த்தத்தைத் தமக்கருளிச் செய்து தம்மை இரக்ஷித்த ஆசாரியனையுந், தீக்கை முதலாக அவன் செய்தருளிய முறைமையையும் நின்ற எழு திருவெண்பாவாலும் அருளிச் செய்கின்றார் :

அகளத்தில் ஆநந்தத் தாநந்தி யாயே
சகளத்தில் தையலுடன் தோன்றி—நிகளத்தைப்
போக்குவதுஞ் செய்தான்தன் பொன்னடியென் புன்தலைமேல்
ஆக்குவதும் செய்தான் அவன்.

(உரை) அடியேனை ஈடேற்றுகைப் பொருட்டுச் சகளீகரித்த திருமேனியிலே தன்னுடைய காருண்ணிய சத்தியுடனே தோன்றி, குற்றமற்ற நிலத்தினுண்டாகிய ஆநந்தத்தில் ஆநந்தியாய்ச் சமைந்தெழுந்தருளியிருந்து, அநாதியே பிணித்த விலங்காகிய மலமாயை கன்மங்களை அநேக சம்ஸ்காரங்களாலே போக்குவதுஞ் செய்து, தன்னுடைய பொலிவினையுடைத்தாகிய திருவடியை என்னுடைய பொல்லாத்தலையிலே வைப்பதுஞ் செய்தான் ஆசாரியன்.

இது தீக்கை முறைமையை அறிவித்தது. கச

குற்றமறுத் தென்னையாட் கொண்டருளித் தொண்டனேன்
உற்ற தியானத் துடனுறைவர்—முற்றவரின்
மாட்சியுமாய் நிற்பரியான் மற்றொன்றைக் கண்டிடின்அக்
காட்சியுமாய் நிற்பார் கலந்து.

(உரை) ஆச்சாரியர் இப்படித் தம்முடைய அருளால் என்னு னுடைய மலமாயை கன்மங்களைப்போக்கி, என்னுடைய சுதந்திரத் தையும் அறுத்து, அடிமைகொண்டு, எனக்கு அநாதியே பிராணனாய் நிற்கின்ற தம்முடைய திருவடி ஞானத்தையும் பிரகாசிப்பித்து, யானென்றும் அதுவென்றுஞ் சொல்லுகின்ற வேறு பாட்டையும் அறுத்து, தம்முடைய வசத்திலே ஆக்கிக்கொண்ட அவசரத்திலே, நான் தியானிப்பானாய் நிற்கைக்கு வந்து அத்தியானமும் தாமேயாய் நில்லா நிற்பர். இந்த நிலை முதிரவருகின்ற ஞேயத்தழுந்தலுந் தாமே யாகா நிற்பர். பிராரத்தத்தாலே நிலை திரிந்து விசுவந்தோன்றுங் காலத்தும் அந்த விசுவந் தோன்றாமல் காண்பானுங் காணப்படும் பொருளுந் தாமேயா யிராநிற்பர்.

இது தீக்கைக்குப் பின்பு உண்மையிலே நிறுத்தின நிலைமையை அறிவித்ததெனக் கொள்க. ௯௫

ஆளுடையான் எந்தரமும் ஆளுடையா னேஅறியும்
தாளுடையான் தொண்டர் தலைக்காவல்—நாளும்
திருவியலூர் ஆளுஞ் சிவயோகி இன்றென்
வருவினையை மாற்றினான் வந்து.

(உரை) வந்து ஆளுடையான் - இப்படி எழுந்தருளி வந்து என்னை அரிதாக அடிமை கொள்ளுகையாலே ஆளுடைய தேவ னென்கின்ற திருநாமத்தையு முடையான்,—எம்தரமும் ஆளுடை யானே - என்னைப்போலுந் தளர்ந்த அடியாரையும் அடிமை கொள்ளுவானும் அவனே,—அறியும் தாளுடையான் - சர்வான்மாக் களின் பொருட்டும் பஞ்சகிருத்தியங்களையும் நடத்தி இவற்றிலே பக்குவப்பட்ட ஆன்மாக்களை அறிந்திரக்ஷிக்கவல்ல திருவடியுமுடை யான் ;—தொண்டர் தலைக்காவல் - உரிய அடியாரை மாயப்படை மேலிட்டு வினை செய்யாது பாதுகாக்கைக்குத் தலைக்காவலாயுள்ள வன்,—நாளுந் திருவியலூர் ஆளுஞ் சிவயோகி - எக்காலமுந் திரு வியலூரே திருப்படை வீடாகவுடைய சிவயோகி,—இன்று என் வருவினையை மாற்றினான் - இப்பொழுது என்னுடைய அஞ்ஞானத் தாலே கன்மபலங் காரணமாக மாயையாகின்ற ஊசலிலே உழலா நிற் கின்ற ஜநந மரணங்களாகிய வினையை யொழித்து, அசைவற்ற நில மாகிய திருவடியிலே வைத்தான்.

இது தம்முடைய ஆசாரியன் திருநாமமும் அவனது மகிமை யும் அருளிச்செய்ததெனக் கொள்க. ௯௬

தூலத் தடுத்த பளிங்கின் துளக்கமெனத்
தூலத்தே நின்று துளங்காமல்—காலத்தால்
தாளைத்தந் தென்பிறவித் தாளை அறவிழித்தார்க்
காளன்றி யென்மா றதற்கு.

(உரை) படிகக்கல், தன் பிரகாசத்தைத் தடுத்த வன்னங்களி னுடைய ரூபங்களாலே தன்னுடைய சுத்தமான பிரகாசந் தோன்றா மல் அதுவதுவாய் நின்றாற்போல, நானுந் தேகத்திலே பொருந்தி நின்று ஜநந மரணங்களிலே மொத்துண்ணாமல், மலபாகமும் கன்ம வொப்புஞ் சத்திநிபாதமும் உண்டான அவசரத்தே, அவதி கூடாமல் எழுந்தருளிவந்து, தம்முடைய பொன்னான திருவடியை என் தலை யினும் இதயத்தினும் நிற்கும்படி தந்தருளி, எனக்கு எழுவகை யாய் எண்பத்து நான்கு நூறாயிர யோனி பேதங்களில் உண்டான ஜநநங்கள் காலற்றுப் போம்படி திருக்கண்சாத்தி யருளின தம்பிரா னார்க்குக் கைம்மாறுசெய்ய எண்ணுமளவில், அவன் வேறொன்றுக் குங் குறைவிலனாகையால் என்னை அடிமையாகக் கொடுத்து நான் பரங்கெட்டு விடுவதொழிந்து, வேறொரு கைம்மாறுங் கண்டிலேன்.

இது கைம்மாறு கருதாமல் எழுந்தருளி வந்து இரக்ஷித்த அதி சயம் அறிவித்ததெனக் கொள்க. ௯௭

இக்கணமே முத்தியினை எய்திடினும் தான்நினைந்த
அக்கணமே ஆனந்தந் தந்திடினும்—நற்கணத்தார்
நாயகற்கும் நாயகிக்கும் நானடிமை எப்பொழுதும்
ஆயிருத்த லன்றியிலே னியான்.

(உரை) பெறுதற்கரிய முத்தியினை இக்கணப்பொழுதிலே பெறி னும், நான் கருதப்பட்ட பரமானந்தம் கருதின கருத்து மாறுவதன் முன்னே பெறினும், இவை ஒன்றையும் ஆசரிப்பதில்லை. இந்தப் பேற்றை அளிக்கைப் பொருட்டு அடியேனுக்காகத் திருமேனி கொண்டெழுந்தருளிவந்த சிவயோகிகளாகிய தம்பிரானார்க்கும் அவ ருக்கு மனவாக்குக் காயங்களாய் நின்ற ஞானசத்திக்கும் நான் எப்

பொழுதும் மீளா அடிமையா யிருப்பதொழிந்து, வேறொன்று மில்லை.

இது பேற்றின் அதிசயத்தால் அடிமை சாதித்ததென அறிக.

என்னை உடையவன்வந் தென்னுடனாய் என்னளவில்
என்னையுந்தன் னுளாகக் கொள்ளுதலால்—என்னை
அறியப்பெற் றேன்அறிந்த அன்பருக்கே ஆளாய்ச்
செறியப்பெற் றேன்குழுவிற் சென்று.

(உரை) எனக்குக் கர்த்தாவாகிய பரமேசுவரன் என்னுடைய அநாதி மயக்கத்தை நீக்குதற்பொருட்டு என்னைப்போல் எழுந்தருளி வந்து, உனக்குள்ளே பொருந்தி நிற்போமென்று என்னைத் தெளிய அறிவித்தவளவில் அந்தக் கருணையாலே நானும் அப்பொழுதே தம் முடைய வசமாய் என்னையும் தாம் விரும்பின அடிமையாகக் கொள் ளுகையால், இப்படித் தம்பிரானுக்கு மீளா அடிமை யானேனென்று என்னுடைய உண்மை அறியப்பெற்றேன். இப்படி முன்னே, அறிந்திருக்கின்ற சிவயோகிகளுக்கு ஏவற் பணிசெய்து அவர்கள் திரட்சியிலே சென்றிருக்கவும் பெற்றேன். இனி என்ன பெற வேண்டும்?

இது பேற்றாலுண்டான நிஷ்பல வேட்கையென அறிக. ௯௯

சிந்தையிலும் என்றன் சிரத்தினிலும் சேரும்வகை
வந்தவனை மண்ணிடைநாம் வாராமல்—தந்தவனை
மாதினுடன் எத்திறமும் வாழ்ந்திருக்க என்பதலால்
ஏதுசொலி வாழ்த்துவேன் இன்று.

(உரை) தன்னுடைய திருவடியானது என்னுடைய தலையினும் இதயத்தினும் பொருந்தும்படி திருமேனிகொண் டெழுந்தருளி வந்த தம்பிரானை, பூமியின் கண்ணே நான் பிறந்திறந்து திரியாதபடி பரமானந்தத்தை அளித்தவனை, எப்பொழுதும் வாழ்த்துமளவில் எல் லைப்படாதாகையால், தன்னைவிட்டு நீங்காத ஞானசத்தியுடனே எவ் விடத்தும் வாழ்ந்திருக்கவென்று சொல்லுவதல்லால் அவனை எப்படி வாழ்த்துவேன்.

இது சிவனைக் கூடப் பெற்றவர்கள் உரையுணர்விறந்து நின்று அநுபவிக்குமதொழிந்து, அவனுடைய உண்மை யறிந்து துதிக்க வெண்ணுமளவில், அவன் உரை யுணர்வுக் கெட்டாதவனென்று அறிவித்தது. ௧௦௦

*ஆதாரமாகி அருளொடு நிற்கின்ற
சூதான இன்பச் சுகவடிவை—ஓதாமல்
உள்ளவர்கள் கூடி யுணர்வொழிய நிற்பதலால்
தெள்ளவா ராதே சிவம்.

*சேடன் படிபுரக்கும் தென்கடவூர் உய்யவந்தான்
பாடுங் களிற்றுப் படிதனக்கு—நீடிமையோர்
தேடும் புகழ்ச்செஞ்சொற் சிவப்பிரகா சன்றிருந்த
நாடியுரை நாடா நயந்து.

சிவஞானபோத வரலாறு

நடுநாட்டிலே திருப்பெண்ணாகடத்திலே அச்சுத களப்பாளர் என்ற வேளாளத் தலைவர் இருந்தார். அவர் பிள்ளைப்பே றில்லாமை யால் தமது குலகுருவாகிய சகலாகம பண்டிதரிடம் சென்று குறை யிரந்து வேண்ட குருவானவர் தேவாரத்தில் கயிறு சாத்திப் பார்த்த போது,

“பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ளநினை
வாயினவே வரம்பெறுவர் ஐயுறவேண் டாவொன்றும்
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையார் அவர்தம்மைத் தோயாவாந் தீவினையே”

என்ற பாடல் கிடைத்தது. உடனே அவர் சீடருக்குத் திருவெண் காடு சென்று முக்குள நீராடிச் சிவபெருமானை வழிபடுமாறு கட்டளை யிட்டார். அவ்வாறே அச்சுத களப்பாளர் தமது மனைவியோடு சென்று வழிபட்டுப் புத்திரப் பேற்றை யடைந்தார். அவ்வழிபாட்டின் தவப்பயனாய்த் தோன்றிய ஆண் பிள்ளைக்குத் திருவெண்காட்டு ஈசனார் பெயராகிய **சுவேதவனப் பெருமாள்** என்ற பெயரையே சூட்டினார். குழந்தையை நல்லம்மான் திருவெண்ணெய் நல்லூராகிய

*இவ்விரண்டு பாடல்களும் பிற்காலத் தான்றோர் வாக்கு.

தமது உறைவிடத்திலே அருமையாக வளர்த்து வந்தார். குழந்தைக்கு மூன்று வயது நடக்கும்போது ஒருநாள் ஆகாயத்தே செல்லும் பரஞ்சோதி முனிவர் தமது செலவு தடைபட்டதை யுணர்ந்து இழிந்து சுவேதவனப் பெருமாளின் பரிபக்குவத்தை யறிந்து குழந்தைக்கு மெய்ஞ்ஞானம் பாலித்து, தமது குருவின் பெயராகிய (சத்தியஞான தரிசனி) மெய்கண்டார் என்ற தீக்ஷா நாமத்தைச் சூட்டிச் சென்றார். மெய்கண்டார் தாம் உபதேச மூலம் அறிந்த பொருள்களைப் பொல்லாப் பிள்ளையாரிடம் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து, தமது குலகுருவாகிய சகலாகம பண்டிதரெனும் அருணந்தி சிவாசாரியார், திருவதிகை மனவாசகங் கடந்தார் முதலிய நாற்பத்தொன்பது மாணவர்கட்கு உபதேசம் செய்து **சிவஞான போதம்** என்ற சாத்திரத்தை அருளிச்செய்து, அதற்கு வார்த்திகம் என்னும் பொழிப்பும் உதாரண வெண்பாக்களும் வகுத்து, அருணந்தி சிவாசாரியருக்கு ஒரு விரிநூல் இயற்றுமாறு கட்டளையிட்டு நிட்டை கூடியிருந்து ஐப்பசிமாதம் சுவாதி நன்னாளில் இறைவன் திருவடியில் இரண்டறக் கலந்தனர். இவர் இற்றைக்கு எழுநூறு ஆண்டுகட்கு முற்பட்டவர் என்று கல்வெட்டு முதலிய சான்றுகளால் துலங்குகிறது. இவரது வரலாற்றின் விரிவையும் சிவஞானபோதம் தமிழ்முதல் நூலேயொழிய வடமொழியினின்றும் மொழிபெயர்க்கப்பட்டதல்ல வென்பதற்குக் காரணங்களையும் "மெய்கண்டாரும் சிவஞான போதமும்" என்ற சமாஜ வெளியீட்டிற் காண்க.

சிவஞான போதத்துக்கு உரைவரைந்தார் பலர். அவருட் காலத்தால் முற்பட்டவர், பாண்டிப் பெருமாள் என்பார். இந்நூலுக்குச் சிற்றுரை யொன்றும் பேருரை (திராவிட மாபாடியம்) ஒன்றும் கண்டவர் திருவாவடுதுறை யாதீனத்து சிவஞான சுவாமிகள். இவர் தென்பாண்டி நாட்டிலே விக்கிரமசிங்க புரத்திலே வேளாண் மரபிலே ஆநந்தக் கூத்தருக்கும் மயிலம்மைக்கும் அருந்தவப் புதல்வராய்த் தோன்றி இளமையிலேயே நல்ல புலமை கைவரப் பெற்று திருவாவடுதுறை சென்று துறவு பூண்டு வேலப்ப தேசிகரிடம் உபதேசம் பெற்று சிவஞானபோதச் சிற்றுரை, பேருரை, சித்தியார் பொழிப்புரை, காஞ்சிப் புராணம் முதலிய இருபத்தொன்பது நூல்களியற்றி, கச்சியப்ப முனிவர், தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவர், இலக்கணம் சிதம்பரநாத முனிவர் முதலிய கஉ மாணவர்கட்கு உபதேசம் செய்து நிட்டைகூடி கி. பி. 1785 - சித்திரைமீ ஆயிலியத்தில் திருவடி முத்தி யெய்தினர். இவரது வரலாற்றின் விரிவை திராவிட மாபாடியத்தின் முகவுரையிற் காண்க.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருவெண்ணெய்நல்லூர் - மெய்கண்டதேவர்

அருளிச்செய்த

சிவஞானபோதம் மூலமும் சிவஞான சுவாமிகள் சிற்றுரையும்

பாயிரம்

சைவாகமங்களின் உளவாகிய நாற்பாதங்களுள் வைத்து ஞான பாதத்தோதிய பொருள்களை ஆராயும் ஆராய்ச்சி இந்நூலின்கண் எடுத்துக் கொள்ளப்பட்டது. இது கேட்டலுறுவார்க்கு இதனாற் போந்த பயன் யாதோ எனவும், இது கேட்டற் குரியார் யாவரெனவும், இதனால் நுதலப்படும் பொருள் யாதெனவும், இதனைப் பயப்பிக்குங் கருவியாய் இதற்குமுன் ஒருதலையா னுணர்தற்பாலது யாதெனவும், இதனை வழங்குதற்கிட்ட பெயர் யாதெனவும், இஃது யாண்டு வழங்குவதெனவும், இதன் முதனூல் யாதெனவும், இந்நூல் செய்தார் யாவரெனவும் பலவாற்றான் ஆசங்கை நிகழுமன்றே; அவ்வாசங்கை நீங்கி மனவெழுச்சி சேறற்பொருட்டு இந்நூன்முகத்துரைக்கப்படுவதாகிய சிறப்புப் பாயிரம் :—

*மலர்தலை உலகின் மாயிருள் துமியப்
பலர்புகழ் ஞாயிறு படரின் அல்லதைக்
காண்டல் செல்லாக் கண்போல் ஈண்டிய

குறிப்பு:—இந்நூலிலும் உரையிலும் இந்த (Pica) எழுத்தில் உள்ளன வெல்லாம் ஆசிரியர் மெய்கண்டார் வாக்கு. ஏனையவெல்லாம் உரையாசிரியர் சிவஞான சுவாமிகள் வாக்கு.

*இப்பாவை யாத்தவர் பெயர் எப்பிரதியிலும் கிடைத்திலது. அருணந்தி சிவாசாரியாராதல் உமாபதி சிவாசாரியாராதல் இதை இயற்றியிருத்தல் கூடுமென்று ஊகிக்க இடமுண்டு.

பெரும்பெயர்க் கடவுளிற் கண்டுகண் இருள்தீர்ந்(து)
அருந்துயர்க் குரம்பையின் ஆன்மா நாடி
மயர்வற நந்தி முனிகணத் தளித்த
உயர்சிவ ஞான போதம் உரைத்தோன்
பெண்ணைப் புனல்சூழ் வெண்ணைச் சுவேதவனன்
பொய்கண் டகன்ற மெய்கண்ட தேவன்
பவநனி வன்பகை கடந்த
தவராடி புனைந்த தலைமை யோனே.—எனவரும்.

(உரை) மலர்...........கண்போல் - விரிந்த இடத்தையுடைய ஞாலத்தின்கண்ணே துன்னிய பெரிய புறவிருள் கெடும்படி பல சமயத்தாராலும் புகழப்படுகின்ற பரிதியங் கடவுள் உதயகிரியினின் றும் போந்தாலன்றிக் காட்சி எய்தமாட்டாத கண்ணொளிபோல,—அருந்துயர்க் குரம்பையின் ஆன்மா நாடி - பொறுத்தற்கரிய துயரங் களுக்கெல்லாம் ஒரு நிலைக்களமாய்ச் சத்த தாதுக்களாற் பொத்திய குரம்பையாகிய காணப்பட்ட உடம்பானே காணப்படாத ஆன்மாவை யும் பரமான்மாவையும் அனுமான அளவையான் வைத்தாராய்ந்து அவற்றது தடத்த லக்கணமெனப்படும் பொதுவியல் புணர்ந்து,—கண் இருள் தீர்ந்து - அவ்வுணர்ச்சியானே கருதியுணரப்படும் அக விருளாகிய ஆணவமலத்தினின்று நீங்கி,—ஈண்டிய பெரும்பெயர்க் கடவுளிற் கண்டு - அது நீங்கியவழி எல்லாநூல்களுந் தன்பொருளே யாகத் திரண்டு கூடிய பெரும்பெய ரெனப்படும் ஒரு வார்த்தை யாகிய மகா வாக்கியத்தான் எடுத்தோதப்படும் முதற் கடவுளது திரு வருளானே அப்பொருள்களது சொரூபலக்கண மெனப்படுஞ் சிறப் பியல்பை அநுபூதியிற் கண்டுணர்ந்து,—மயர்வு அற - இம்முறை யானே மயக்கவாசனை யற்றுச் சிவாநுபவம் பெறுதற் பொருட்டு,—நந்தி முனிகணத்து அளித்த - சீகண்ட தேவர்பாற் கேட்டருளிய நந்தி பெருமான் சனற்குமார முனிவன் முதலிய முனிவர் கணங் கட்கு முறையானே அளித்தருளப்பட்ட,—உயர் சிவஞானபோதம் - சரியை முதலிய மூன்று பாதப் பொருள்களை ஆராயு நூல்களின் மேற்பட்ட சிவஞானபோத மென்னும் வடநூலை,—உரைத்தோன் - மொழிபெயர்த்துக் கூறி வார்த்திக மெனப்படும் பொழிப்புரை செய் தோன்,— பெண்ணைப் புனல்சூழ் வெண்ணைச் சுவேதவனன் - பெண்ணையாற்று நீராலே சூழப்பட்ட திருவெண்ணெய் நல்லூரில்

அவதரித்தருளிய சுவேதவனப் பெருமாளென்னும் பிள்ளைத் திரு நாமமுடையான்,—பொய்கண்டு அகன்ற மெய்கண்ட தேவன் - பொய்ச் சமயங்களின் பொருள் இதுவிது வென்று கண்டு கழிப்பித்த காரணத்தாற் பெற்ற மெய்கண்ட தேவனென்னுஞ் சிறப்புத் திரு நாமமுடையான்,—பவம் நனி வன்பகை கடந்த தவர் அடி புனைந்த தலைமையோனே - பிறவியாகிய மிக்க வலிய பகையினை வென்ற தவத்தோர் தனது திருவடியைப் புனைந்து கோடற்கேதுவாகிய தலை மைப்பாட்டினை யுடையோன்.

படரிற் காண்டல் செல்லுங் கண்ணெனற்பாலதனை எதிர்மறை முகத்தாற் கூறினார், இன்றியமையாமை விளக்குதற்கு. இப்பொருள் பற்றிக் கண்மேல் வைத்துக் கூறினாரேனும், உவமேயப் பொருட் கேற்பக் காண்டல் சேறற்குப் படர்ந்த ஞாயிறுபோ லென்பது கருத் தாகக் கொள்க. இருட்கேட்டிற்கும் நிருவிகற்பஞ் சவிகற்ப மென் னும் இருவகைக் காட்சிக்கும் ஞாயிறு இன்றியமையாச் சிறப்பிற்றாய வாறுபோல, மலத்தீர்விற்கும் ஆராய்ச்சி அநுபூதி யென்னும் இரு வகை யுணர்விற்கும் இன்றியமையாச் சிறப்பிற்றாயது இந்நூலென் பார், துமியப் படரி னல்லதைக் காண்டல் செல்லாக் கண்போ லிருடீத் தீர்ந்து கண்டு மயர்வற வளித்த சிவஞானபோத மென்றார். தலைமை பற்றி அருந்துயர்க் குரம்பையி னென்றாரேனும், இனம் பற்றிக் கர ணம் புவன முதலியனவும் உடன் கொள்ளப்படும். அருந்துயர்க் குரம்பையி னுடப்படுவதாகிய பொதுவியல்பு மூன்றாறு சூத்திரத்தா னும், பெரும்பெயர்ப் பொருளிற் காணப்படுவதாகிய சிறப்பியல்பு பின்னாறு சூத்திரத்தானு மோதுப. நாடி யெனவே அநுமான வள வையா னென்பதூஉம், கண்டெனவே அநுபூதியி லென்பதூஉம் தாமே போதரும். பொது வியல்பு அளவை முகத்தானும் இலக்கண முகத்தானுங் கூறப்பட்டுக் கேட்டல் சிந்தித்தல் என்னும் இரு திறத்தா னுணரப்படும்; சிறப்பியல்பு சாதன முகத்தானும், பயன் முகத்தானுங் கூறப்பட்டுக் கேட்டல் சிந்தித்தல் தெளிதல் நிட்டையென்னும் நான்கு திறத்தானுணரப்படும்.

இஃதென் சொல்லியவாறோ வெனின்:—இவ்விருவகை யியல் பும் வேறு வேறு கூறும் ஆகமங்களின் பொருளொருமை உணரமாட் டாது ஒரோவொன்றே பற்றி ஐக்யவாத முதற் பலதிறத்தான் வேறு பட்டுத் தம்முள் மாறுகொண்டு மயங்குவார்க்கு அங்ஙனம் மயங்கா

வாற்றான் பொருளொருமை யுணர்த்தற்கு எழுந்தது இந்நூலென்றவாறாயிற்று. சிவஞானபோத மென்பதூஉம் இக்காரணத்தாற்பெற்ற பெயரென்பது வடமொழிச் சிவஞானபோதத் திறுதிச் சூத்திரத்தோதியவாறுபற்றி யுணர்க.

சரியை முதலிய மூன்று பாதப்பொருளை ஆராயு நூல்களாவன சோமசம்பு பத்ததி முதலாயின. அந்நூல்களின் மேற்பட்ட சிவஞானபோதமெனவே, அந்நூல்களுணர்ந்த பின்னர் இந்நூல் கேட்கற்பாற்றென்பது பெறப்பட்டது; படவே, முன்னர்த் தீக்கையுற்றுச் சிவாகமங்களை ஓதி அதன்பின்னர்ச் சரியாபாத முதலியவற்றை ஆராயும் நூல்களை முறையே கேட்டு அவ்வாறொழுகி மனந்தூயராய் நித்தியாநித்திய உணர்வு தோன்றிப் பிறவிக்கஞ்சி வீடுபேற்றின் அவாமிக்குடையராய் வந்த அதிகாரிகளுக்கு இந்நூலுணர்த்துக என்பது போந்ததெனக் கொள்க.

உயர் சிவஞானபோதமெனவே யாப்பும், கேட்போரும், நுதலிய பொருளும், நூற்பெயரும்; நாடித் தீர்ந்து கண்டு மயர்வறவெனவே நுதலிய பொருளின்வகையும், பயனும்; நந்தி முனிகணத்தளித்தவெனவே வழியும்; வெண்ணைச் சுவேதவனன் மெய்கண்ட தேவன் எனவே ஆக்கியோன் பெயரும், தமிழ் வழங்குநிலமே இந்நூல் வழங்குநிலமென எல்லையும் போந்தவாறுணர்க. வடநூலார் யாப்பை ஆனந்தரியமென்றும், நுதலிய பொருளை விடயமென்றும், கேட்போரை அதிகாரிகளென்றும் பயனைப் பிரயோசனமென்றுங் கூறுப. யாப்புச் சம்பந்தமென்பாருமுளர்.

மங்கல வாழ்த்து

காமிக முதலிய சைவாகமங்களுள் ஞானபாதத்தி னுளதாகிய ஆசங்கை நீக்கி அவற்றின் பொருளுண்மை பொதுவியல்பு சிறப்பியல்பென்று இரு வேறுவகைப்படுத்துக் காட்டிப் போதித்தற்கு இரௌரவாகமத்தினெழுந்த சிவஞானபோத நூலினைத் தமிழுலகம் உய்தற்பொருட்டு மொழி பெயர்த்துச்செய்து பொழிப்புரைப்பானெடுத்துக் கொண்ட ஆசிரியர், சாக்கிரத்தே அதீதத்தைப் புரியுந் தமக்கு இடையூறு சிறிதுமணுகாமை அறிந்தாராயினும், ஆன்றோராசாரம் பாதுகாத்தற்பொருட்டும், மாணுக்கர்க் கறிவுறுத்தற்பொருட்டும், முதற்கண் இடையூறு நீக்குதற்குரிய விநாயகக் கடவுளை வாழ்த்துவதாகிய மங்கல வாழ்த்துக் கூறு[illegible]

சைதாப்பேட்டை திருக்காரணீசுவரர் தமிழ் வேதபாராயண சபையின் 3-ம் ஆண்டு விழா

நமது சமாஜத்தோடு இணைக்கப்பெற்ற இச்சபையின் விழா மிகச் சிறப்பாக 30-5-34 முதல் ஐந்து நாட்கள் நடைபெற்றது. திருவாளர்கள் - ச. சச்சிதாநந்தம் பிள்ளை, கி. குப்புச்சாமி முதலியார், பு. சமரபுரி முதலியார், ம. பாலசுப்பிரமணிய முதலியார் முதலிய அன்பர்கள் பலர் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள்.

அப்பர் திருநாள்

இது நிகழும் பவஆண்டு சித்திரைமாதம் உரு-ம்நாள் (8-5-34) செவ்வாய்க்கிழமை யன்று தஞ்சை, களிமேடு கிராமத்திலுள்ள அப்பரவையில் கொண்டாடப்பெற்றது. அதுகாலை நடுப்பகல் 12-மணிக்கு சுவாமிகளுக்குப் பூசையும், அடியார்களுக்கு அன்னதானமும் நடைபெற்றன. பிறகு மாலை 4½-மணிக்குப் பலவான்குடி சைவத் திருவாளர் ராம. கு. ராம. இராமசாமிச் செட்டியாரவர்கள் தமிழ் வேதபாராயணத்துடனும், இன்னிசை வாத்தியங்களுடனும் வரவேற்கப்பட்டார்கள். அவர்கள் தலைமையில் ஓர் சைவசபை கூடிற்று. அது போது திரு. நாராயணச் சாரியாரவர்கள் B. A. L. T., தமிழ்ப்பண்டிதர் திரு. சிங்காரவேற் பிள்ளையவர்கள், தஞ்சைச் சைவசித்தாந்த இளைஞர் சங்க உறுப்பினர்கள் நால்வர்கள், தமிழ்ப்பண்டிதர் திரு. பா. சிவகுருநாத பிள்ளையவர்கள் என்பவர்கள் முறையே அடியார் பெருமை, பெரியார் போரால் செய்யும் பேரறம், ஆத்திகநாத்திக அளவளாவல், வெளிமயக்கு என்பனபற்றி மிக்க இனிமையுடன் கேட்போர் வியக்குமாறு சொற்பொழிவாற்றினார்கள். பின்னர் தலைவரவர்கள் முடிப்புரை கூற, வந்தனோபசாரத்தோடு சபை இனிது நிறைவெய்தியது. இரவு 10-மணிக்கு முத்துவிமானத்தில் அப்பர் சுவாமிகள் திருவுலாக்காட்சி இன்னிசை வாத்தியங்களுடனும், தமிழ் மறையுடனும் இனிது நிறைவெய்தியது.

மதிப்புரை

ஜ்யோதிஷபோதினி :—மாதப்பத்திரிகை. ஆண்டுச் சந்தா ரூ. 1½. ஆசிரியர் பிரமஸ்ரீ பலாக்ஷர் - நா. இராமநாத சாஸ்திரியார், மயிலாப்பூர், மதராஸ்.

இப்பத்திரிகைக்கு நல்வரவு கூறுகின்றோம். இவ்வாசிரியர் நமது சிறந்த நண்பர்; நல்ல வடமொழிப் பயிற்சி யுள்ளவர். இப்பத்திரிகையில் ஆங்கிலத்திலும் தமிழிலும் இனிய அரிய கட்டுரைகள் திகழ்கின்றன. சாதாரண மக்கள் ஜோதிஷத்திலுள்ள பல நுட்பமான விஷயங்களை எளிதில் தெரிந்துகொள்ளும் முறையில் கட்டுரைகள் அமைந்துள்ளன. பரோபகார சிந்தையுடன் எல்லோருக்கும் பயன்படுமாறு சந்தா மிகக் குறைவாக அமைக்கப்பட்டிருக்கிறது. இப்பத்திரிகை தமிழ்நாட்டில் ஒவ்வொருவர் கையிலும் இருத்தல்வேண்டும்.

Registered No. 2330. "SIDDHANTHAM" Vol. 7. No. 6.

வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!!

பெரிய புராணம்

சமாஜத்தின் அடக்கவிலைச் சுத்தப் பதிப்பு

இப்பதிப்பில் பெரியபுராணத்தின் மூலம் செம்மையாகவும் திருத்தமாகவும் பல ஏட்டுப் பிரதிகளைக் கொண்டு செப்பஞ் செய்யப் பெற்று அச்சிடப்பட்டுள்ளது. முக்கியமான பகுதிகள் தடித்த எழுத்தில் அச்சிடப்பட்டுள்ளன. சேக்கிழார் வரலாறு, காலஆராய்ச்சி, நாயன்மார் அட்டவணை, அரும்பொருள் அகராதி, சேக்கிழார் புராணம், திருமுறைகண்ட புராணம், திருத்தொண்டர் திருவந்தாதி, புராணசாரம், இதுவரை எந்தப் பதிப்பிலும் வெளிவாராத பாட்டு முதற்குறிப்பகராதி முதலியன இப்பதிப்பில் விளங்குகின்றன.

தனிப்பிரதி விலை ரூ. 1— 6—0
ரிஜிஸ்தர் தபாற்கூலி 0—10—0
ஆறுபிரதிகள் விலை ரூ. 7— 8—0 தபாற்கூலி வேறு.

பன்னிரு திருமுறைகள்:—சமாஜப் பதிப்பு ரயில்வே பார்சல் மூலம்அனுப்பத் தபாற்கூலி விலையுட்பட ரூ 6/-(ரயில்சார்ஜ்மட்டும் வாங்குவோர் செலுத்தவேண்டும்.)

சங்கப் புலவர் அகராதி

பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு எனப் படும் சங்க நூல்களிற் காணப்படும் ஆசிரியர்கள் பெயர்களெல்லாம் அகர வரிசையில் தொகுக்கப்பட்ட இந்நூல், ஒவ்வொரு புலவரும் இயற்றிய பாடல்களும் இன்ன இன்ன என்ற குறிப்போடு பல பேரறிஞர்கள் உதவியைக் கொண்டு சமாஜப் பதிப்பாக வெளிவந்துள்ளது. தனிப்பிரதி விலை அணா 2½. தபாற்கூலி அணா 1. எட்டுப் பிரதிகள் விலை ரூபா ஒன்று. தபாற் கூலி வேறு. ஒவ்வொரு தமிழ் மாணவரிடமும் இவ்வகராதி இருத்தற் குரியது.

சிவஞான சித்தியார் சுபக்கம்

மூலமும் சிவஞான சுவாமிகள் உரையும் - சமாஜத்தின் அடக்க விலைச் சுத்தப் பதிப்பு - தனிப் பிரதி விலை அணா 12. ரிஜிஸ்தர் தபாற் கூலி அணா 5. எட்டுப் பிரதிகள் விலை ரூபா. 5. தபாற் கூலி வேறு.

Printed by T. V. Volaganathan at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah and Published by M. Balasubramania Mudaliar (Editor-in-charge) for the Saiva Siddhanta Maha Samajam, 160. Govindappa Naicken Street, G. T. Madras.